பக்கங்கள்: 11

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 08 வள்ளுவர் ஆண்டு 2055 தை 18 வெள்ளிக்கிழமை 31.01.2025 கதிர் 084

## கொழும்பில் வளி மாசு அதிகரிப்பு முகக் கவசம் அணிய அறிவுரை

கொழும்பு மற்றும் கொழும்பை அண்மித்த பல பகுதிகளில் வளி மாசு அதிகரித்துள்ளமையால் நாட்பட்ட சுவாச நோயாளர்கள் நோயிலிருந்து பாதுகாப்பு பெற முகக்கவசங்களை அணியுமாறு கொழும்பு சிறுவர் வைத்தியசாலையின் சிறுவர் நோய் தொடர்பான விசேட வைத்திய நிபுணர் தீபால் பெரேரா வலியுறுத்தியுள்ளார்.

அவர் நேற்று கொழும்பில் செய்தியாளர்களிடம் பேசிய போது இதனைத் தெரிவித்தார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

கொழும்பு மற்றும் கொழும்பை அண்மித்த பல பகுதிகளில் இந்நாட்களில் வளி மாசு அதிகரித்துள்ளதை காணக் கூடியதாக உள்ளது. இதனால் சிறுவர்களிடையே சுகாதார பிரச்சினைகளும் உயர்வடைந்துள்ளன. விசேடமாக மூச்சுத்திணறல், இருமல், ஆஸ்துமா மற்றும் சுவாச நோய் சார்ந்த வைரஸ் பரவலும் அதிகரித்துள்ளது. நாட்பட்ட சுவாச நோயாளர்களுக்கும் நோய் நிலைமை தீவிரமடையலாம். ஆகையால் அனைவரும் அவதானத்துடன் செயற்படுவது நல்லது.

சிறுவர்கள், வயோதிபர்கள் மற்றும் கர்ப்பிணித் தாய்மார்களுக்கும் ☞ 2

## காலியில் நேற்றிரவு மூவர் சுட்டுக்கொலை

### மோட்டார் சைக்கிளில் வந்தோர் கைவரிசை

காலி ஹினிதும பணங்கல பகுதியில் நேற்றிரவு இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் மூன்று பேர் கொல்லப்பட்டனர்.

மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் ரி -56 ரக துப்பாக்கியால் இந்தத் தாக்குதலை நடத்திவிட்டுத் தப்பிச் சென்றனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்தவர்களில் இருவர் 29 மற்றும் 54 வயதுடையவர்கள் என்பதோடு, மற்றையவரின் வயது உடனடியாக ☞ 2

## இனி இது ரகசியம் அல்ல!

தமிழ் அரசுக் கட்சியை முழுமையாக அழித்துவிடவேண்டும் என்று எண்ணுபவர்கள் மறைந்த தலைவர் மாவையின் இறுதிச்சடங்கை வைத்தும் ஏதாவது குழப்பங்களைச் செய்துவிட முடியுமா என்பதில் தீவிர ஆர்வம் காட்டி வருகின்றார்கள்.

மாவையின் இறுதி நிகழ்வுகளில் தமிழ் அரசுக் கட்சியின் மத்திய குழு உறுப்பினர்களுக்கு எதிராக செயற்பாடுகள் இருக்கும் என்கிற வகையில் தூண்டி ☞ 2

## பத்திரிகையாளர்கள் மட்டக்களப்பில் நேற்று தீப்பந்தம் ஏந்திப் போராட்டம்

### கறுப்பு ஜனவரியை முன்னிட்டு

பத்திரிகையாளர்கள் நேற்றுமாலை மட்டக்களப்பு நகரின் மத்தியில் தீப்பந்தங்களை ஏந்திப் போராட்டத்தில் ஈடுபட்டனர். படுகொலை செய்யப்பட்ட, கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்ட ஊடகவியலாளர்களை நினைவு கூறும் கறுப்பு ஜனவரி நிகழ்வையொட்டி அவர்கள் இந்தப் போராட்டத்தை நடத்தினர்.

மட்டு காந்தி ☞ 2




## இருளில் இருந்து இருள் நோக்கி சென்றுகொண்டிருக்கிறது நாடு

### உதய கம்மன்பில விளாசல்

நாடு இருளில் இருந்து இருளை நோக்கிச் சென்று கொண்டிருக்கும் இந்த நேரத்தில், கடந்த கால மோதல்கள் பொருத்தமற்றவை என்று பிவித்துரு ஹெல உறுமய தலைவர் உதய கம்மன்பில நேற்று கொழும்பில் எதிர்க்கட்சித் தலைவர்களுடனான சந்திப்பின் பின்னர் தெரிவித்தார்.

இந்தக் கூட்டத்தை முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கூட்டியிருந்தார்.

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிற்கும் எதிர்க்கட்சித் தலைவர்களுக்கும் இடையிலான ☞ 2

## பாவனைக்கு உதவாத கோதுமை மா சிக்கியது

சேதவத்த பகுதியில் கொள்கலன் ஒன்றில் இருந்து பாவனைக்கு உதவாத கோதுமை மா தொகை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

தலா 25 கிலோ கொண்ட 30 ஆயிரம் பொதிகள் வரை அதிலிருந்து கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக நுகர்வோர் விவகார அதிகார சபை தெரிவித்துள்ளது.

நுகர்வோர் விவகார அதிகார சபைக்கு கிடைத்த முறைப்பாட்டிற்கு அமைய இந்த சுற்றிவளைப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதன்போது புழுக்கள் ☞ 2

# வேறுபாடுகளை எல்லாம் மறந்து மாவைக்காக ஒன்றிணைவோம்

## தமிழ் அரசுக் கட்சித் தலைவர் அழைப்பு





தமிழ் தேசிய இனத்தின் தலைவர்களை ஒன்றிணைத்த ஒரு போராளி மாவை சேனாதிராசா. தமிழ் அரசுக் கட்சி சார்ந்து எல்லா வேறுபாடுகளையும் மறந்து அவருடைய நினைவாக பிளவுகள், பிரிவுகள் இன்றி ஒற்றுமையாக முன் ☞ 2

## 3 உபகுழுக்கள் நியமனம்

போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான சேவைகள் துறையில் காணப்படும் சிக்கல்களுக்கு தீர்வுகளைக் கண்டறிய 3 அமைச்சுசார் உப குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளன.

10ஆவது நாடாளுமன்றத்தின் முதலாவது கூட்டத் தொடரில் நடைபெற்ற முதலாவது அமைச்சுசார் ஆலோசனைக் குழுக் கூட்டம் நடைபெற்ற போது இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் ☞ 8

## சுதந்திரக் கட்சித் தலைவரை ஏற்றுக்கொண்டார் மைத்திரி

ஸ்ரீ லங்கா சுதந்திர கட்சியின் தற்போதைய தலைவர் மற்றும் செயலாளரை ஏற்றுக்கொள்வதாக முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நீதிமன்றத்துக்கு அறிவித்துள்ளார் என்று முன்னாள் இராஜாங்க அமைச்சர் லசந்த அழகியவண்ண தெரிவித்தார்.

அவர் நேற்று செய்தியாளர்களிடம் பேசியபோது, கட்சியிலிருந்த சகல பிரச்சினைகளுக்கு தீர்வு கிடைத்துள்ளது என்று தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

உள்ளுராட்சிமன்றத் தேர்தல் உட்பட எதிர்வரும் சகல தேர்தல்களிலும் ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி தலைமையிலான கூட்டணி கதிரை சின்னத்தில் போட்டியிடும். இந்த ☞ 2

## மோசடிக் குற்றச்சாட்டில் முன்னாள் செயலர் கைது

### நீதிமன்றம் சரீரப் பிணையில் விடுவித்தது

2011 ஆம் ஆண்டு கூட்டுறவு நிதியத்திற்குச் சொந்தமான ஒரு இலட்சம் ரூபாவை குற்றவியல் நம்பிக்கை மோசடி செய்த குற்றச்சாட்டில் முன்னாள் அமைச்சின் செயலாளர் பிரியந்த மாயாதுன்னே நேற்று குற்றப்புலனாய்வு பிரிவினரால் கைது செய்யப்பட்டார்.

சந்தேகநபர் கோட்டை நீதிவான் நீதிமன்றத்தில் -முற்படுத்தப்பட்ட பின்னர் பிணையில் விடுவிக்கப்பட்டார்.

2011 ஆம் ஆண்டு குருநாகலில் சர்வதேச கூட்டுறவு தினத்தைக் கொண்டாடுவதற்காக நடைபெற்ற 'இசுரு சவிய' ☞ 2

## ரணில் கூட்டிய கூட்டத்தில் திகா, மனோவும் பங்கேற்பு

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் நேற்றுப் பிற்பகல் விசேட அரசியல் கலந்துரையாடலொன்று நடைபெற்றது. இதில் ஐக்கிய மக்கள் கூட்டணியைச் சேர்ந்த தமிழ் அரசியல் தலைவர்களான மனோ கணேசன் மற்றும் திகாம்பரம் ஆகியோரும் பங்கேற்றனர்.

கொழும்பில் உள்ள ஒரு தனியார் ஹோட்டலில் இந்தக் கலந்துரையாடல் நடைபெற்றதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சம்பந்தப்பட்ட கலந்துரையாடலை முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஏற்பாடு செய்திருந்ததாக பங்கேற்றிருந்த அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் தெரிவித்தனர்.

கடந்த ஜனாதிபதித் தேர்தலில் முன்னாள் ஜனாதிபதியை ☞ 2

## அரசியல் பழிவாங்கல் என்ற பெயரில் ஊழல்வாதிகள் தம்மை காக்க முயற்சி

### குற்றஞ்சாட்டுகிறார் அமைச்சர் சமரசிங்க

அரச நிதியை மோசடி செய்தவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கும் போது அதனை அரசியல் பழிவாங்கல் என்று குறிப்பிட்டுக் கொண்டு ஊழல்வாதிகள் தங்களை பாதுகாத்துக் கொள்ள முயற்சிக்கிறார்கள். மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிக்கு அமைய ஊழல்வாதிகளை சட்டத்தின் முன் முன்னிலைப்படுத்துவோம் என வர்த்தகம், உணவு பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சர் வசந்த சமரசிங்க தெரிவித்தார்.

அவர் நேற்று அநுராதபுரத்தில் செய்தியாளர்களிடம் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் ☞ 8

காலைக்கதிர் Kalaikkathir

# நுவரெலியாவில் மண்சரிவு அபாயம்

## 36 பேர் பாதுகாப்பான இடங்களுக்கு மாற்றம்

நுவரெலியா பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட ஹைபோரெஸ்ட் பிரிவில் மண்சரிவு அபாயம் காரணமாக நேற்று பலர் பாதுகாப்பான இடத்திற்கு வெளியேற்றப்பட்டுள்ளனர்.

அதன்படி, 6 குடும்பங்களைச் சேர்ந்த 36 பேர் பாதுகாப்பான இடங்களுக்கு வெளியேற்றப்பட்டுள்ளனர்.

இந்தக் குழுவினருக்குத் தேவையான உணவை பேரிடர் நிவாரண சேவைகள் மையம் மூலம் வழங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக நுவரெலியா மாவட்ட பேரிடர் பிரிவு தெரிவித்துள்ளது.

தொடர்ந்துமழைபெய்துவருவதால், குறித்த பகுதியில் மண்சரிவு அபாயம் உள்ளதால் அங்குள்ளகுடும்பங்கள்பாதுகாப்பானஇடத்திற்கு அனுப்பப்பட்டு, அவர்களுக்கு தேவையான வசதிகள் வழங்கப்பட்டுள்ளதாகவும் அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

இதற்கிடையில், நுவரெலியாமாவட்டத்தை மோசமான காலநிலை நிலவுவதால், ஹங்குரான்கெத்த மற்றும் வலப்பனை பகுதிகளில் பல வீதிகளில் போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளன.

## இனி இது .....

விட்டுக்கொண்டிருக்கின்றார்கள். தேர்தலில் தமிழ் அரசுக் கட்சியைத் தோற்கடிக்க முடியாதவர்களும் அவர்களுக்கு நிதி உதவி வழங்கி ஊக்குவிப்பவர்களும் இப்போது மறைந்த தலைவரின் இறப்பை வைத்தாவது ஏதாவது குழப்பங்களைச் செய்தாவது கட்சியைப் பலவீனப்படுத்தலாமா என்று சிந்திக்கிறார்கள்.

மறைந் தலைவரின் உடலை தமிழ் அரசுக் கட்சியின் அலுவலகத்தில் மக்கள் அஞ்சலிக்காக வைப்பதற்கு அவரது குடும்பத்தினர் அனுமதி வழங்கவில்லை என்பதை ஆதாரமாகக் காட்டி கட்சியில் ஒரு தரப்பினருக்குகடும்எதிர்ப்புத்தெரிவிக்கிறார்கள் மாவையின்சகோதரர்களும்குடும்பத்தினரும் என்று கதைகளைப் பரப்புகிறார்கள். சம்பந்தரின் உடல் கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்திற்கு எடுத்துவரப்பட்டு அஞ்சலிக்காக வைக்கப்பட்டபோது மக்கள் மிகக் குறைந்தளவிலேயே வந்து அஞ்சலி செலுத்தினர். தற்போது மாவையின் குடும்பத்தினர் பொது இடத்தில் அவரது புகழுடலை அஞ்சலிக்கு வைப்பதைத் தவிர்த்ததற்குப் பின்னால் இத்தகைய காரணங்களும் இருக்கக்கூடும். ஆனாலும் இதனையும் சர்ச்கைக்குள்ளாக்கி அரசியல் லாபமீட்டுவதில் சில தரப்பினர் கங்கணம் கட்டிக்கொண்டு செயற்படுகின்றனர் என்பது தெளிவாகத் தெரிகின்றது.

மாவைமக்களின்தலைவராகஇருந்தவர். அவர்தமிழ்அரசுக்கட்சிக்குமட்டும்தலைவர் அல்லர். அவரது அரசியல் முடிவுகள் மீது விமர்சனங்கள் இருந்திருக்கலாம், அவரது அரசியல் பணிகள் விமர்சிக்கப்பட்டும் இருக்கலாம். அது எல்லா அரசியல் தலைவர்களும்எதிர்கொள்வதுதான். அதற்காக அவர் மக்களின் தலைவராக இல்லை என்றாகிவிடாது. அவர் தமிழ் மக்களின் நலனுக்காக, இன விடுதலைக்காக நடத்திய போராட்டம் இல்லையென்றாகிவிடாது. இப்போதைய தேவை எல்லாம் அவர் தமிழர்களுக்கு ஆற்றிய பணிகள் மக்கள் முன்எடுத்துரைக்கப்பட்டு அந்தத் தலைவரை மக்களின் முழுமையான அஞ்சலியுடன் அனுப்பி வைப்பதுதான். அதை விடுத்து எரியும் வீட்டில் பிடுங்கியது இலாபம் என்று செயற்படுபவர்களின் போக்கிற்கு இடமளிப்பது மாவை என்கிற அரசியல் தலைவருக்குச் செய்யும் துரோகம். குழப்பங்களும் வீண் பீதிகளும் இன்றி மக்கள் திரண்டு வந்து அந்தத் தலைவருக்கு அஞ்சலி செலுத்தும் வழி வகை செய்யப்படவேண்டும். அவரது இறுதிக் கணக்கங்களிலும் மக்களிடமிருந்து அவரைத் தூரமாக்கும் கைங்கரியங்களில் ஈடுபடாதிருப்பதே சிறந்தது. மாவை என்கிற தலைவரைமாமனிதராக்குவதேதற்போதைய காலத் தேவை. அதுவே தமிழ்த் தேசியத்தின் தேவையும்கூட.

மாவையின் இறுதிக் கிரியைகள் ஞாயிற்றுக்கிழமை அவரது வீட்டில் இடம்பெறும் காலை 8 மணிக்கு இறுதிக் கிரியைகள் இடம்பெற்று, 10 மணிக்கு அஞ்சலி உரைகள் இடம்பெற்று பிற்பகல் 1 மணிக்கு தச்சன்காடு இந்து மயானத்தில் தகனக் கிரியைகள் இடம்பெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. தமக்காகத் தனது வாழ்க்கையைஒட்டுமொத்தமாகஅர்ப்பணித்த ஒரு தலைவருக்கான தமது இறுதி அஞ்சலிகளைச் செலுத்தி அவரை மதிப்போடு வழியனுப்பி வைக்கவேண்டிய கடமை மக்களும் தவறாது நிறைவேற்றவேண்டும்.

.................................

ஜனாதிபதி அநுரகுமார திசநாயக்க இன்று யாழ்ப்பாணம் வருகின்றார். யாழ்ப்பாணம் மாவட்டச்செயலகம்உட்படமூன்றுஇடங்களில் அவர் நிகழ்வுகளில் கலந்துகொள்கிறார். யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்திற்குஅவர்தலைமையேற்கிறார். அந்தக் கூட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர்கள் பேசுவதற்கு 5 நிமிடங்கள் மட்டுமே தரப்படும் என்று அறிவிக்கப்பட்டிருக்கின்றது. அதற்கு நாடாளுமன்ற உறுப்பினர்களிடமிருந்து எதிர்ப்புக் கிளம்பியிருக்கின்றது. தாம் பேசும் நேரத்தை எப்படிக் கட்டுப்படுத்த முடியும் என்று நேரக் கட்டுப்பாட்டை உதாசீனம் செய்திருக்கிறார்கள் அவர்கள். எனவே கூட்டம் எப்படி நடந்து முடியப் போகின்றது என்பது குறித்த ஆர்வம் அதிகமாகி உள்ளது.

யாழ்ப்பாணத்திற்கான தனது பயணத்தில் மாவையின் புகழுடலுக்கும் ஜனாதிபதி நேரில் அஞ்சலி செலுத்துவதற்கான வாய்ப்புக்கள் இருப்பதாகக் கூறப்படுகின்றது. எனினும் அது தொடர்பிலான பாதுகாப்பு ஏற்பாடுகள் குறித்து நேற்றுவரையில் குடும்பத்தினருடன் பேசப்பட்டிருக்கவில்லை.

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## வேறுபாடுகளை ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செல்லவேண்டும் என்று இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் தலைவர் சிவஞானம் தெரிவித்துள்ளார்.

மாவை சேனாதிராசாவின் புகழுடலுக்கு அஞ்சலிசெலுத்தியபின்னர்செய்தியாளர்களிடம் அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

மாவை சேனாதிராசாவின் இழப்பு இலங்கைத் தமிழ் அரசுக் கட்சிக்கு மட்டுமல்ல ஒட்டுமொத்த தமிழ்த் தேசிய இனத்திற்குமான இழப்பாகும்.

அவர் தமிழ் தேசிய இனத்தின் தலைவர்களை ஒன்றிணைத்த ஒரு போராளி. மக்களுக்காக தனது வாழ்க்கையில் பல தியாகங்களையும்,அர்ப்பணிப்புக்களையும் செய்த ஒருவர். கட்சியை கட்டி வளர்ப்பதில் எல்லோரையும் அந்நியோன்யமாக அரவணைத்துச் சென்ற ஒருவர்.

அவருடைய இழப்பு என்பது இலங்கை தமிழ் அரசுக் கட்சிக்குப் பெரும் இழப்பு என்பதுடன் அது கட்ச்சிக்கு பெரும் தாக்கத்தையும் ஏற்படுத்தும்.

உங்களுடைய நினைவோட்டம் தமிழ் அரசுக்கட்சிசார்ந்துஎல்லாவேறுபாடுகளையும் மறந்து அவருடைய நினைவாக பிளவுகள், பிரிவுகள் இன்றி ஒற்றுமையாக முன் செல்ல வேண்டும்.

இலங்கை தமிழ் அரசுக் கட்சியை வளர்த்து மீண்டும் பழைய நிலைமைக்கு கொண்டுவரவேண்டும் அது மாவை சேனாதிராசா அவருடைய பெயராலேயே நிறைவேறவேண்டும்.

அவர் ஒரு நல்ல ஆத்மா! வஞ்சகம் இல்லாத உள்ளத்தை கொண்டவர்.

அவருடைய ஆத்மா சாந்தியடைய வேண்டும் என்று நான் பிரார்த்திக்கின்றேன் என்றார்.

## இருளில் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சந்திப்பு மிகவும் வெற்றிகரமாக அமைந்ததாகவும் கம்மன்பில தெரிவித்தார்.

சமகி ஜன பலவேகயவை பிரதிநிதித்துவப்படுத்தும் மனோ கணேசன் மற்றும்திகாம்பரம், முன்னாள் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன, அனுர பிரியதர்ஷன யாப்பா, துமிந்த திசாநாயக்க, காஞ்சன விஜேசேகர, சாகல ரத்நாயக்க, வஜிர அபேவர்தன மற்றும் பிற கட்சித் தலைவர்கள் இந்தக் கூட்டத்தில் கலந்துகொண்டனர்.

## காலியில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உறுதிப்படுத்தப்படவில்லை.

சம்பவம் தொடர்பான விரிவான விசாரணைகளை ஹினிதும பொலிஸார் முன்னெடுத்துவருகின்றனர்.

## ரணில் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆதரித்த அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் இதன்போது கலந்துக்கொண்டிருந்தனர்.

ஐக்கிய மக்கள் சக்தியை பிரதிநிதித்துவப்படுத்திநாடாளுமன்றஉறுப்பினர்களான மனோ கணேசன் மற்றும் பழனி திகாம்பரம் ஆகியோர் இந்தக் கலந்துரையாடலில் கலந்துக்கொண்டிருந்தமை விசேட அம்சமாகும்.

மேலும், முன்னாள் சபாநாயகர் மஹிந்த யாப்பாஅபேவர்தன, உதயகம்மன்பில, அனுர பியதர்ஷன யாப்பா, துமிந்த திசாநாயக்க, காஞ்சன விஜேசேகர, சாகல ரத்நாயக்க, மற்றும் வஜிர அபேவர்தன ஆகியோரும் பங்கேற்றுள்ளனர்.

## மோசடிக்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிகழ்வுக்காக கூட்டுறவு நிதியிலிருந்து ரூ. 183 மில்லியன் செலவழித்தமை தொடர்பாக இலஞ்ச விசாரணை ஆணைக்குழுவின் விசாரணைகளுக்குஅமையகூட்டுறவுமற்றும் வர்த்தக அமைச்சின் முன்னாள் செயலாளர் பிரியந்த மாயாதுன்னே குற்றப் புலனாய்வு பிரிவினரால் கைது செய்யப்பட்டார்.

கூட்டுறவு மற்றும் வர்த்தக அமைச்சின் மேலதிக செயலாளராக இருந்தபோது, ஒரு இலட்சம்ரூபாதொகையை மோசடிசெய்ததாக குற்றம் சாட்டப்பட்டு, அவர் மீது நம்பிக்கை மோசடி குற்றச்சாட்டு சுமத்தப்பட்டது.

சட்டமா அதிபரின் அறிவுறுத்தலின் பேரில் பிலியந்தல பகுதியில் வைத்து கைது செய்யப்பட்ட சந்தேக நபர், இன்று பிற்பகல் கோட்டை நீதிவான் நிலுபுலீ லங்காபுர முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்டார்.

குறித்தநிகழ்விற்கானபோக்குவரத்துக்காக 100,000 ரூபா செலவிடப்பட்டதாக சந்தேகநபர் தெரிவித்த போதிலும், அது எவ்வாறு செலவிடப்பட்டது என்பதை நிரூபிக்கத் தவறிவிட்டதாக குற்றப் புலனாய்வு பிரிவு தெரிவித்துள்ளது.

இந்தப் பணம் யாருக்கு வழங்கப்பட்டது என்று கேட்டபோது, அப்போதைய கூட்டுறவு மற்றும் வர்த்தக அமைச்சராக இருந்த ஜொன்ஸ்டன் பெர்னாண்டோவின் மெய்க்காப்பாளருக்கு இது வழங்கப்பட்டதாக சந்தேக நபர் கூறியுள்ளார், ஆனால் சந்தேக நபரால்அதுயார்என்றுசொல்லமுடியவில்லை என்று விசாரணை அதிகாரிகள் தெரிவித்தனர்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகள் தொடர்ந்து நடைபெற்று வருவதால், சந்தேக நபரை விளக்கமறியலில் வைக்குமாறு குற்றப் புலனாய்வு பிரிவு நீதிமன்றத்தைக் கோரியது.

சந்தேகநபர் பிரியந்த மாயாதுன்னே சார்பில் ஆஜரான சட்டத்தரணி சுரங்க பெரேரா, அமைச்சரின் அறிவுறுத்தலின் பேரில் பணம் வழங்கப்பட்ட போதிலும், அது 13 ஆண்டுகளுக்கு முன்பு நடந்த ஒரு சம்பவம் என்பதால், யாருக்கு பணத்தைக் கொடுத்தார் என்பது தனது கட்சிக்காரருக்கு நினைவில் இல்லை என்று கூறினார்.

இந்த சந்தேக நபர் சம்பவத்தில் ஒரு இடைத்தரகர் மட்டுமே என்றும், நிதியை தவறாகப் பயன்படுத்தியதற்காக அவரைக் குற்றவாளியாகக் காண போதுமான ஆதாரங்கள் இல்லை என்றும் கோட்டை நீதவான் நிலுபுலீ லங்காபுர தெரிவித்தார்.

எனவே, சந்தேக நபருக்கு பிணை மறுக்க எந்த காரணமும் இல்லை என்று கூறிய நீதவான், சந்தேக நபரை இலட்சம் ரூபா பெறுமதியான சரீரப் பிணை இரண்டுடன் பிணையில் விடுவிப்பதாக உத்தரவிட்டார். விசாரணைகளின் முன்னேற்றத்திற்காக வழக்கு மே 28 ஆம் திகதி மீண்டும் விசாரணைக்கு வர உள்ளது.

## சுதந்திரக்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கூட்டணிக்கு தலைமைத்துவ சபையொன்று காணப்படுகிறது. அதன் தலைவராக அநுரபிரியதர்ஷ யாபாவும், செயலாளராக நானும் செயற்படுகின்றோம்.

ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் தற்போதைய தலைவர் மற்றும் செயலாளரை ஏற்றுக் கொள்வதாக முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நீதிமன்றத்துக்கு அறிவித்துள்ளார். அதற்கமைய கட்சியிலிருந்த சகல பிரச்சினைகளுக்குத் தீர்வு கிடைத்துள்ளது. 95 சதவீதமானோர் மீண்டும் எம்முடன் இணைந்துள்ளனர். ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் முன்னாள் எம்.பி.க்கள் 30 பேர் எம்முடன் இணைந்துள்ளனர்.

இன்றைய ஆளும்தரப்பு தமக்கு வழங்கிய வாக்குறுதிகள் எவையும் நிறைவேற்றப்படவில்லை என்று மக்கள் அதிருப்தியைவெளியிட்டுவருகின்றநிலையில், அமைச்சர்கள் எவ்வித பிரச்சினையும் இல்லை எனக் கூறிக் கொண்டிருக்கின்றனர்.

தற்போது ஏற்பட்டுள்ள நெருக்கடிகளுக்கு கடந்தஆளும்தரப்பேகாரணம்என்றுஇன்றைய ஆளும்தரப்பினர் குற்றஞ்சாட்டுகின்றனர். நாட்டை வங்குரோத்து நிலையிலிருந்து தாமே மீட்டதாகவும் குறிப்பிடுகின்றனர். பொருளாதார நெருக்கடிகள் தீக்கப்பட்டு தான் நாடு தேசிய மக்கள் சக்தியிடம் கையளிக்கப்பட்டது. ஆனால் இவர்களுக்கு அதனை முன்னெடுத்துச் செல்வதே சிக்கலாகவுள்ளது. மக்களுக்கு இந்த யதார்த்தம் புரிய ஆரம்பித்துள்ளது என்றார்.

## பத்திரிகையாளர்கள் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பூங்காவில் நிறுவப்பட்டுள்ள, படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர்களுக்கான நினைவுத்தூபிக்கு அருகில் தீப்பந்தங்களை ஏந்தியபடி அவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

மட்டக்களப்பு மாவட்ட தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியம், கிழக்கிலங்கை செய்தியாளர் சங்கம் மற்றும் மட்டு.ஊடக அமையம் ஆகியன இணைந்து இந்தப் போராட்டத்தை ஏற்பாடு செய்திருந்தன.

ஊடகவியலாளர்கள் அரசியல்வாதிகள் சிவில் சமூக செயற்பாட்டாளர்கள் ஆகியோர் ஒன்றுகூட முதலில் படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர்களுக்கு நினைவுத் தூபியில் சுடர் ஏற்றி அஞ்சலி செலுத்தினர். தொடர்ந்து தீப்பந்தங்களை ஏந்தியபடி சுமார் ஒரு மணி நேரம் கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

## கொழும்பில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சுவாசிப்பதில் சிரமம் ஏற்படலாம். நாட்பட்ட சுவாச நோயாளர்கள் மற்றும் ஆஸ்துமா நோயாளர்கள், நோயிலிருந்து பாதுகாப்பு பெற முககவசங்களை அணிவது நல்லது. தொடர்ச்சியான இருமல் மற்றும் மூச்சுத்திணறல் உள்ளவர்கள் எவரேனும் இருப்பின் உடனடியாக அருகில் உள்ள தகுதியான வைத்தியரை நாடுங்கள். அத்தோடு இன்புளுவென்சா, சிக்கன் குனியா போன்ற வைரஸ் தொற்றுகளும் சமூகத்தில் வெகுவாக பரவி வருகிறது.

பாடசாலை மட்டத்திலான விளையாட்டுப் போட்டிகள் ஆரம்பமாகியுள்ள இக்காலத்தில் சிறுவர்கள்பலமணிநேரமாகவெளியிடங்களில் நடமாடுவதும்அதிகரித்துள்ளது. தொடர்ச்சியான இளைப்பு, தடிமன் உள்ளவர்களுக்கும் ஆஸ்துமா போன்ற நோய்கள் ஏற்படலாம். மேலும் வைரஸ் பரவல் காரணமாக நியூமோனியா ஏற்படுவதற்கும் வாய்ப்புள்ளது. நீண்டகாலம்மாசடைந்தவளியைசுவாசிப்பது நுரையீரல் புற்றுநோய்க்கு வழிவகுக்கும். இவ்வாறான சூழ்நிலைகளின் போது உரிய சுகாதார விதிமுறைகளை பின்பற்றுவது அவசியம் என்றார்.

## பாவனைக்கு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

காணப்பட்ட கோதுமை மா தொகையே கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இந்த கோதுமை மா தொகையை கொண்டுவந்த நபர் தொடர்பாக இதுவரை தகவல்கள் வெளியாகவில்லை.

# நீண்ட காலமாகத் தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு குரல்கொடுத்தவர் தமிழரசு மாவை சோ.சேனாதிராசா!

## ஹிஸ்புல்லாஹ் எம்.பி. அனுதாபம்

(இல்சாத் பர்வீஸ்)

இலங்கைத்தமிழ்அரசுக்கட்சியின்பெருந்தலைவரும், தமிழ் மக்களுக்காக தன் வாழ்நாள்களை போராட்டங்களோடு ,சிறைவாசங்களோடும் கடந்து பெரும் பங்காற்றிய சரித்திர நாயகன் மாவை சேனாதிராசா அவர்களின் மறைவு மக்கள் மத்தியில் அதிர்ச்சியையும் கவலையையும் ஏற்படுத்தியிருக்கிறது என்று ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பிரதித்தலைவரும் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான கலாநிதி எம்.எல்.ஏ.எம் ஹிஸ்புல்லாஹ் தெரிவித்தார்.

தமிழ்அரசியல்தலைவர்மாவைசேனாதிராசாவின் மறைவையிட்டு வெளியிட்ட அனுதாப செய்தியிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

மறைந்த தலைவர் மாவை சேனாதிராசா அவர்கள் என்னோடு நாடாளுமன்றத்தின் இருந்த ஒருவர். அவரை பற்றி நான் நன்றாக அறிந்தவன் தமிழ் மக்கள் அரசியல் ரீதியாக பிரச்சினைகளை எதிர்நோக்குகின்ற பல்வேறு சந்தர்ப்பங்களின் தைரியமாக குரல்கொடுத்தவர் என்பதுடன் மிகவும் நீதியாகவும் நியாயமாகவும் நடந்துகொள்கின்றவர் என்பதுடன், நான் எப்போதும் மதிக்கும் தலைவர்களில் ஒருவர் என்றும் என்றும் தெரிவித்தார்.

நீண்ட காலமாகத் தமிழ் மக்களின் அரசியல் பிரச்சினைகளுக்கு குரல் கொடுத்த இலங்கை தமிழரசுக் கட்சியின் மூத்த தலைவர் மாவை சேனாதிராசா ஐயாவின் மறைவு தமிழர் வரலாற்றில் நிரப்ப முடியாத வெற்றிடமாக இருக்கும் என்றும் அன்னாரது ஆத்மா சாந்தி அடைய இறைவனை வேண்டுகிறேன் எனவும் தெரிவித்தார்.



# மாவை சேனாதிராஜாவின் மறைவு தமிழ் மக்களுக்கு பெரும் இழப்பு

## இ.தொ.கா. தலைவர் செந்தில் தொண்டமான் இரங்கல்

(நூருல் ஹுதா உமர்)

தமிழ்த் தேசிய அரசியல் பரப்பில் ஆளுமையாக செயல்பட்ட இலங்கை தமிழரசுக் கட்சியின் மூத்த தலைவரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை சேனாதிராஜாவின் மறைவு தமிழ் மக்களுக்கு பாரிய இழப்பாகும் என இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தலைவர் செந்தில் தொண்டமான் இரங்கல் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

மாவை சேனாதிராஜா தனது 19 வயதில் அரசியல் பயணத்தை தொடங்கி 83 வயது வரை முழுநேர அரசியல் தலைவராக தமிழ் மக்களுக்காகப் பணியாற்றியுள்ளார்.

போருக்கு முன்னரும் பின்னரும் என இவரது அரசியல் நகர்வுகள் பல்வேறு பரிணாமங்களைக் கொண்டுள்ளது. நாடாளுமன்ற உறுப்பினராக செயற்பட்ட காலத்திலும் இவரது பணி காத்திரமாக இருந்தது.

தமிழ் மக்களுக்கு எதிரான அடக்குமுறைகளைக் கண்டித்து போராடி சிறைவாசமும் அனுபவித்தவர் மாவை சேனாதிராஜா. அன்னாரின் இழப்பு தமிழர்களின் அரசியல் பரப்புக்கு பேரிழப்பாகும்.

இலங்கை தொழிலாளர் காங்கிரஸுக்கும் மாவை சேனாதிராஜாவுக்கும் மிக நெருங்கிய உறவு இருந்தது. அமரர் சௌமியமூர்த்தி தொண்டமான், அமரர் ஆறுமுகன் தொண்டமான் காலம் முதல் இந்த உறவு தொடர்ந்தது. மலையகத் தமிழ் மக்களுக்காக இ.தொ.காவுடன் இணைந்து அவர் பல சந்தர்ப்பங்களில் குரல் கொடுத்துள்ளார்.

அவரை இழந்து வாடும் அவரது குடும்பத்துக்கும் உறவுகளுக்கும் மக்களுக்கும் இ.தொ.கா சார்பாக தனது இரங்கலை தெரிவித்துக் கொள்வதுடன், அவர் விட்டு சென்ற பணிகளை தமிழரசு கட்சி தொடர வேண்டும். - என்றும் செந்தில் தொண்டமான் தனது இரங்கல் செய்தியில் கூறியுள்ளார்.



# தமிழ் பேசும் மக்களின் உரிமைக்காக பாடுபட்ட உன்னத தலைவர் மாவை எஸ். சேனாதிராஜா!

## ஐக்கிய மக்கள் முன்னணி பிரதித் தலைவர் நளீர் இரங்கல்

(நூருல் ஹுதா உமர்)

தமிழ் பேசும் மக்களின் உரிமைகளை வென்றெடுப்பதற்காகவாழ்வைஅர்ப்பணித்து சேவையாற்றிய தலைவர் மாவை எஸ். சேனாதிராஜா அவர்களின் மறைவால் துயருற்றிருக்கும்அவரது குடும்பத்தினருக்கும் இலங்கை தமிழ் அரசுக் கட்சினருக்கும் எனது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக் கொள்கிறேன் என ஐக்கிய மக்கள் முன்னணி பிரதித் தலைவர் எம்.ஏ.நளீர் விடுத்துள்ள இரங்கல் செய்தியில் தெரிவித்துள்ளார்.



அவரது இரங்கல் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு -

தமிழ் முஸ்லிம் மக்கள் ஒற்றுமையாக இணைந்து செயற்பட்டால்தான் தமது உரிமைகளை வென்றெடுக்க முடியும் என்று அசையா நம்பிக்கை கொண்ட அன்னார், கொவிட்19 இல் மரணித்த முஸ்லிங்களது ஜனாஸாக்கள் வலுக்கட்டாயமாக வஞ்சகமான முறையில் எரிக்கப்பட்ட போது முஸ்லிம் சமூகத்திற்கு ஆதரவாகவும் ஜனாஸா எரிப்பிற்கு எதிராகவும் ஓங்கி குரல் கொடுத்தார் என்பதுடன் இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஊடாக நாடாளுமன்றத்திலும் குரல் கொடுக்க வைத்ததை நன்றியுடன் நினைவு கூருகிறேன்.

தமிழ் பேசும் மக்களுக்கும் நாட்டுக்கும் விசுவாசமான முறையில் சேவையாற்றிய தலைவர் என்ற அடிப்படையில் அவரது இழப்பு இலங்கையின் தமிழ் முஸ்லிம் சமூகங்களுக்கு பேரிழப்பாகும். இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் முன்னாள் தலைவர் மாவை எஸ். சேனாதிராஜா அவர்கள் தனது கட்சியின் கொள்கைகளை பற்றுறுதியுடன் முன்னெடுத்து உரிமைகள் மறுக்கப்பட்ட தமிழ் பேசும் மக்களின் குரலாக செயற்பட்டு அம்மக்களுக்கு நியாயமான நிரந்தர தீர்வு கிடைக்க வேண்டும் என்று தனது இறுதி மூச்சு வரை பயணித்த உன்னத தலைவரின் மறைவு தமிழ் பேசும் மக்களுக்கு மட்டுமன்றி இலங்கை மக்கள் அனைவரும் ஈடுசெய்ய முடியாத இழப்பாகும்.

அன்னாரின் மறைவால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கும் இலங்கை தமிழ் அரசுக் கட்சியினருக்கும் எனது ஆழ்ந்த அனுதாபங்களைதெரிவிப்பதுடன்அன்னாரின் ஆத்மா சாந்தி அடைய பிரார்த்திக்கிறேன் என்று தெரிவித்துள்ளார்.

# 100 ஓட்டோ சாரதிகளுக்கு நிதி உதவி

(அபு அலா)

மேல் மாகாணத்தில் ஓட்டோ தொழிலில் தங்களது வாழ்வாதாரத்தை பெற்று வாழும் மூவின ஓட்டே ஓட்டுநர்கள் 100 பேருக்கு தலா 10 ஆயிரம் ரூபா நிதி உதவி வழங்கும் நிகழ்வு கொழும்பு பண்டாரநாயக்கசர்வதேசமாநாட்டு மண்டபத்தில் இடம் பெற்றது.

மனித உரிமைகள் மக்கள் பாதுகாப்பு அமைப்பின் விருது வழங்கும் நிகழ்வின்போது யாழ்ப்பாணத்தை சேர்ந்த சமூக சேவையாளர் தியாகி வாமேந்திரனின் சொந்த நிதியிலிருந்து குறித்த உதவிகள் வழங்கி வைக்கப்பட்டன.



இந்த நிதி உதவித் தொகையை மனித உரிமைகள் மக்கள் பாதுகாப்பு அமைப்பின் பிரதித் தலைவர் எப்.எம்.ஷரீக்கால் வழங்கி வைக்கப்பட்டதும் குறிப்பிடத்தக்கது.

காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## துப்பாக்கிகள் மீதான கட்டுப்பாடு

**சட்டபூர்வமாக வழங்கப்பட்ட துப்பாக்கிளை தாம் மீளப் பெற்று வருகின்றோம் என்றும் சட்டவிரோதமான துப்பாக்கிளைப் பறிமுதல் செய்து வருகின்றோம் என்றும் ஆளும்தரப்பு பரப்புரை செய்தாலும் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்கள் குறைவதாக இல்லை. நாளுக்கு நாள் அதிகரித்தே வருகின்றன. நேற்றும்கூட காலியில் மூன்று பேர் சுட்டுக் கொல்லப்பட்டனர். மன்னாரில் நீதிமன்றத்தின் முன்பாக தைப் பொங்கலுக்கு அடுத்த நாள் இருவர் சுட்டுக் கொல்லப்பட்டனர். அதனை கூலிக்குக் கொலை செய்யும் கும்பலைச் சேர்ந்த படைச் சிப்பாய் ஒருவர் உள்ளிட்ட கும்பல் நிகழ்த்தியதாகத் தெரிவிக்கப்பட்டு 5 சந்தேகநபர்களும் கைது செய்யப்பட்ட பின்னரே காலி கொலைகள் இடம்பெற்றுள்ளன.**

**கடந்த இரண்டு வாரங்களாக, துப்பாக்கி தொடர்பான பல குற்றங்கள் பதிவாகியுள்ளன, அவற்றில் பல துப்பாக்கிச் சூடு சம்பவங்களும், அதன் விளைவாக ஏற்பட்ட இறப்புகளும் ஒழுங்கமைக்கப்பட்ட குற்றங்களுடன் தொடர்புடையவை என்று காவல்துறையினர் திடமாக நம்புகின்றனர். இலங்கையில் தனிநபர் பாதுகாப்புக்காக ஆயுதங்களைப் பெறுவது மிகவும் சட்டச் சிக்கலான, கடினமான பணியாக இருந்தபோதும் சட்டவிரோதக் கொலைகளுக்கான ஆயுதங்களின் புழக்கம், போர் முடிவுக்கு வந்த இந்த 15 ஆண்டுகளில் பெருமளவில் உயர்ந்துள்ளது. படைமுகாம்களுக்குள் இருந்த ஆயுதங்களே இவ்வாறான சட்டவிரோதப் பாவனைக்கு விநியோகிக்கப்படுகின்றன என்று பொருள்கொள்ளக்கூடியவகையில் இராணுவமுகாம்ஒன்றில்இருந்துபலதுப்பாக்கிகள்காணாமற்போயிருப்பதாக அண்மையில் அரசுத் தலைவர் தெரிவித்திருந்தார். என்றால் அரச படையினரின் ஆதரவின்றி இந்த ஆயுதப் பரிமாற்றங்களும் கொலைகளும் சாத்தியமில்லை என்பது தெளிவாகின்றது.**

**2019 ஆம் ஆண்டின் தொடக்கத்தில், துப்பாக்கி உரிமங்கள் தொடர்பான முக்கிய தகவல்களின் மையப்படுத்தப்பட்ட வலையமைப்புத் தரவுத்தளம் இல்லாதது வெளிச்சத்திற்கு வந்தது, துப்பாக்கி ஒழுங்குமுறையில் நீண்டகால இடைவெளி இருப்பதை அப்போதைய பாதுகாப்பு அமைச்சகம் ஒப்புக்கொண்டது. அந்த நேரத்தில், நாட்டில் துப்பாக்கி உரிமம் வைத்திருப்பவர்களின் சரியான எண்ணிக்கை தனக்குத் தெரியாது என்று பாதுகாப்பு அமைச்சகம் கூறியது. துப்பாக்கிப் பதிவு மற்றும் தரவு சேகரிப்பு என்பது ஒரு பலவீனமான புள்ளியாகும்.**

**2019 ஆம் ஆண்டின் நடுப்பகுதியில் பாதுகாப்பு அமைச்சகம் சில புள்ளிவிவரங்களைப் பகிர்ந்து கொண்டது, அதன்படி, இலங்கையில் நான்கு பிரிவுகளின் கீழ் 21,247 உரிமம் பெற்ற துப்பாக்கிகள் உள்ளன. அவற்றில், 15,783 உரிமம் பெற்ற துப்பாக்கிகள் விவசாய நோக்கங்களுக்காக அல்லது விலங்குக் கட்டுப்பாட்டிற்காகவும், 411 விளையாட்டு நோக்கங்களுக்காகவும் வழங்கப்பட்டுள்ளன.**

**செப்டம்பர் 2023 இல், காலாவதியான துப்பாக்கிச் சட்டத்தில் ஒரு திருத்தத்தைத் தயாரித்து வருவதாகவும், சட்ட வரைவாளர் மற்றும் சட்டமா அதிபர் திணைக்களத்தால் அதற்கான ஒரு வரைவு உருவாக்கப்பட்டு வருவதாகவும் அப்போதைய ஆளும்தரப்பு தெரிவித்தது, அதிகரித்து வரும் துப்பாக்கிக் குற்ற அலையைத் தொடர்ந்தும், 1980 – –90 காலகட்டத்தில் துப்பாக்கிகள் வழங்கப்பட்ட கிட்டத்தட்ட 157 அரசியல்வாதிகள், அவர்களுக்கு வழங்கப்பட்ட 698 துப்பாக்கிகளை திருப்பித் தரவில்லை என்ற ஆச்சரியமான அறிக்கையின் பின்னணியிலும் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டது. ஒரு கேள்விக்கு பதிலளிக்கும் விதமாக (ஆகஸ்ட் 22) நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கை (3397/2023), அந்தக் காலகட்டத்தில் நூற்றுக்கணக்கான அரசியல்வாதிகள் மற்றும் கட்சிச் செயலாளர்களுக்கு அரை தானியங்கி 9 மிமீ பிஸ்டல்கள் மற்றும் .12 –கேஜ் ரிப்பீட்டர் ஷொட்கன்கள் வழங்கப்பட்டுள்ளதாகவும், அவற்றில் பல கணக்கில் வராமல் போனதாகவும், திருப்பித் தரப்படவில்லை என்றும் சுட்டிக்காட்டியது.**

**புதிய மக்கள்தேசிய சக்தி (ஹிஊணஊண) பதவியேற்ற சில நாட்களுக்குப் பிறகு, உரிமம் பெற்ற அனைத்து துப்பாக்கிகளையும் திரும்பப் பெற உடனடியாக நடவடிக்கை எடுத்தது. பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஏர் வைஸ் மார்ஷல் (ஓய்வு பெற்ற) சம்பத் துயகொண்டாவின் கூற்றுப்படி, 'சுய பாதுகாப்பு' பிரிவின் கீழ் உரிமம் பெற்ற ஒருவருக்கு ஒரு துப்பாக்கியை மட்டுமே வழங்க ஆளும்தரப்புக் கொள்கை முடிவை எடுத்துள்ளது,**

**1550 நபர்களுக்கு வழங்கப்பட்ட 1697 துப்பாக்கி உரிமங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதாக துயகொண்டா செய்தியாளர்களிடம் தெரிவித்தார். 1697 துப்பாக்கிகளில் 1368 மட்டுமே திரும்பப் பெறப்பட்ட காலத்தில் தணிக்கைக்காக பாதுகாப்பு அமைச்சிடம் திருப்பி அனுப்பப்பட்டன. இதனால் 182 உரிமதாரர்கள் கிட்டத்தட்ட 330 துப்பாக்கிகளை திருப்பித் தரவில்லை. இணங்காதவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுப்பது குறித்து சட்டமா அதிபர் துறையிடம் சட்ட ஆலோசனை பெற்று வருவதாக பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் தெரிவித்தார். இந்த நடவடிக்கை பாராட்டத்தக்கது என்றாலும், இலங்கையில் உரிமம் பெற்ற துப்பாக்கிகளை சிறப்பாக ஒழுங்குபடுத்துவதற்காக, நன்கு விவாதிக்கப்பட்ட தேசிய துப்பாக்கி கொள்கையை ஆளும்தரப்பு அறிமுகப்படுத்தவேண்டும். மட்டுமல்லாது அரச படையினரின் ஆயுதங்கள் பாதாள உலகக் கும்பல்களிடம் செல்வதைத் தடுப்பதற்கான சிறந்த பொறிமுறையும் உருவாக்கப்படவேண்டும். கூலிக் கொலையாளிகளாகப் படையினர் மாறுவதைத் தடுப்பதற்கான திட்டங்களும் அவசியமாகின்றன.**

# உரைகல் அரசியல்

**என்.சத்திய மூர்த்தி**

*சமகால தமிழர்களின் பெருந்தலைவர் என்று கடைசிகாலத்தில் அடைமொழியுடன் அறியப்பட்ட சம்மந்தன் மறைந்து சரியாக ஏழு மாதங்கள் முடிவுற்ற நிலையில், தமிழ் அரசு கட்சியின் மற்றொரு மூத்த தலைவரான மாவை சேனாதிராசா இயற்கை எய்தி உள்ளார். முதலாமவர் முழு நேர மிதவாதி என்றால், மாவையார் மிதவாத வழியை விட்டு போராளியாக ஏழு ஆண்டுகள் சிறைவாசத்தை அனுபவித்துவிட்டு, மீண்டும் காந்தீய அரசியலுக்கு திரும்பியவர்.*

*மாவை சேனாதிராசா, தந்தை செல்வாவின் மிதவாத தமிழ் அரசுக் கட்சியில், இளைஞரணி தலைவர், பிற்காலத்தில் பொது செயலாளர், தலைவர், நாடாளுமன்ற உறுப்பினர் என்று பல்வேறு பதவிகளை அலங்கரித்தவர். குறிப்பாக, வடக்கில் பிறந்து, அங்கேயே அரசியல் செய்து, பின்னர் கிழக்கே அம்பாறை மாவட்டத்தில் தேர்தலில் போட்டியிட்டு தோல்வியுற்றவர்.*

*பின்னர், மாவை தேசிய பட்டியல் ஊடாகவும் வட மாகாணத்தில் போட்டியிட்டு வெற்றி பெற்ற காரணத்தினாலும் நாடாளுமன்ற உறுப்பினராக ஏழு முறை பதவி வகித்தவர். சமகாலத்தில், சம்மந்தனும் கிழக்கில் பிறந்து, அங்கேயே அரசியல் செய்து, பின்னர் வடக்கு மாகணத்தில் நாடாளுமன்ற தேர்தலில் போட்டியிட்டு தோல்வியுற்றமையும் குறிப்பிடத்தக்கது. பிற்காலத்தில், அவரும் கிழக்கே தனது சொந்த மாவட்டமான திருகோணமலையில் மட்டுமே தேர்தல் அரசியல் செய்தவர்.*

*அந்த விதத்தில் அவர்களின் எதிர்நீச்சல் அரசியல்தான் அவர்கள் இருவரையும் இணைத்ததோஎன்னவோ! இல்லையென்றால், சம்மந்தன் தமிழ் அரசு மற்றும் தமிழ் தேசிய கூட்டமைப்பின் தலைமை பொறுப்பை வகித்த காலகட்டத்தில், மாவை சேனாதிராசாவிற்கு உயர் பதவிகள் அளித்து மகிழ்ந்தமைக்கான காரணம் இல்லை என்றே தோன்றுகிறது.*

*இனப்போருக்கு பிந்தைய காலகட்டத்தில், 2013 வட மாகாண முதல்வர் பதவியை மாவையார் எதிர்பார்த்தார் என்றாலும் சம்மந்தன் அடையாளம் காட்டிய நீதியரசர் விக்னேஸ்வரனையும் அதிக முகசுளிப்பு இல்லாமல் ஏற்றுக்கொண்டார். ஆனால், சம்மந்தன் நோய்வாய்பட்ட மூன்றாண்டு காலத்திலும், தனது தலைமைத்துவத்தை, தமிழ் அரசு கட்சியின் பிற மூத்த தலைவர்கள் ஏற்றுக்கொள்ளவில்லை என்பதை அவரால் கிரகித்துக் கொள்ளமுடியவில்லை என்பதே உண்மை.*

*குறிப்பாக, கடந்த ஆண்டு, நாடாளுமன்ற தேர்தல் தொடங்கி, அதற்கும் முந்தைய கட்சித் தலைவர் தேர்தல் உள்ளிட்ட உள்வீட்டு அரசியலில், உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசிய மாவை சேனாதிராசா, தனக்கு கொஞ்சநஞ்சம் இருந்த மரியாதையையும் இழந்தார் என்பது வருத்தமான பதிவு. எப்படி கடைசி காலத்தில், தனது பதவியை விட்டுக்கொடுக்க விரும்பாத சம்மந்தன் கட்சியினராலும், பிறராலும் புறக்கணிக்கப்பட்டாரோ, கிட்டத்தட்ட அதே நிலைக்கு மாவையும் தன்னை கள்ளிக்கொண்டார் என்பது சமகால வரலாறு.*

*தற்போது, மாவையின் மறைவை ஒட்டி, தமிழர்கள் மத்தியில் அரசியல் செய்ய அனைத்து தரப்பினருமே தயாராகி வருவதாகவே எண்ணத் தோன்றுகிறது. அதிலும், தமிழ் அரசு கட்சியின் உள்கட்சி குத்து-வெட்டுகளில் அவரது பெயரும், மறைவும் நினைவும் அல்லாடப் போகின்றன. ஆனால், அவருடைய பெயரும் காணாமல்போன ஆளுமையும் அவருக்கே தேர்தல் ரீதியாக அண்மை காலங்களில் பயன்படவில்லை. என்று நினைக்கும்போது, அவரது இறுதிச் சடங்குகளுக்குப் பின்னர் குடும்பத்தார் தவிர யாரும் அவரை நினைத்துப் பார்ப்பார்கள் என்று தோன்றவில்லை.*

*தற்போது, அவரது கடைசி கட்ட உடல் நிலையை முன்னிறுத்தி, அவரது குடும்பத்தவர்களே, சுமந்திரன் சார்ந்த முன்னெடுப்புகளை செய்கிறார்கள் என்பது பல கேள்விகளை எழுப்புகிறது. அந்த வாதத்திற்கு ஆதரவு தருவோர், முன்பு சம்மந்தனின் உடல் நலம் குன்றிய போதெல்லாம் அதற்குச் செல்வம் அடைக்கலநாதனின் 'நானே கூட்டமைப்பின் பிரதி தலைவர்' என்ற தான்தோன்றி தன அரசியல் முன்னெடுப்புகளை எதிர்த்து சமூக வலைதளங்களில் பதிவு செய்தார்களா என்ன?*

## முதலில்லாத மூலதனம்

*மாவையின் கடந்த கால அரசியல் மற்றும் தமிழின சேவைகள் குறித்து பேசும் தரப்பினர், அவருக்கு விடுதலை புலிகள் அமைப்பின் தலைவர் பிரபாகரன் தனது மனதில் கொடுத்திருந்த மரியாதையைக் குறித்துச்சிலாக்கிக்கின்றனர். அது போன்றே, சம்மந்தன் மறைந்தபோதும், அவருக்கு பிரபாகரன் கொடுத்திருந்ததாக இவர்கள் கூறும் மதிப்பு-மரியாதைகளை வைத்தே அவரையும் எடை போட்டனர்.*

*அதாவது, இனப்போர் முடிந்துபட்ட பதினைத்து ஆண்டு காலத்திற்கு பின்னரும் சமகால அரசியல் தலைவர்கள் குறித்து கருத்து தெரிவிக்கும்போது, அவர்களுக்குப் பிரபாகரன் என்ற உரைகல் தேவைபடுகிறது. அல்லது, பிரபாகரனை உரைகல்லாக பயன்படுத்துவதன் மூலம் அவரது நினைவையும் இவர்கள் அடுத்த தலைமுறை தமிழர்கள் மீது திணிக்கப் பார்க்கிறார்கள்.*

*இந்த 'திணிப்பு அரசியல்' மூலம் இவர்கள் சாதிப்பது என்ன? அல்லது, சாதிக்க நினைப்பது என்ன? அவர்களை பொறுத்த வரையில், பிரபாகரனின் நினைவை அடுத்தடுத்த தலைமுறையினருக்கும் கொண்டு சென்று நிலைநிறுத்துவது ஒரு நீண்டகால திட்டம் அல்லது 'புரெஜெக்ட்'. அதனை இனப்பிரச்சினைக்கான தீர்வுத் திட்டத்தின் ஒரு பகுதி என்று கருதி யாரும் தங்களைக குழப்பிக் கொள்ளக்கூடாது.*

*உள்நாட்டுத் தமிழர்களில் இந்தத் தரப்பினர் மற்றும் புலம்பெயர்ந்தோரில் பெருவாரியினர், இனப்பிரச்சினை, அதற்கான தீர்வு திட்டம் மற்றும் அதனை ஒட்டிய காணால் ஆக்கப்பட்டோர். தமிழர்கள் நிலம் மற்றும் கலாசார அடையாளங்கள் குறித்த பல்வேறு பிரச்சனைகள் குறித்து எல்லாம் அதிகமாகக் கவலைபடுகின்றனர் போன்று தெரியவில்லை. மாறாக, பிரபாகரனின் பெயரை வைத்து அரசியல் செய்வதையே ஒரு முழுநேர தொழிலாக ஆக்கிக் கொண்டுள்ளார்கள்.*

*இந்த பின்னணியில், அவர்கள் அறிந்தோ, அறியாமலோ, பிரபாகரன் உரைகல் அரசியலையும் தங்களது பொக்கெற்றில் வைத்துக்கொண்டு பயணிக்கிறார்கள். எங்கெல்லாம், எப்போதெல்லாம் தேவைபடுகிறதோ, அப்போதெல்லாம், அங்கேயே அதனை வெளியில் எடுத்து பயன்படுத்திக் கொள்கிறார்கள்.*

*இவ்வாறுதானே, பொற்கொல்லர்கள், தங்களது உரைகல்லை பயன்படுத்துகிறார்கள்! அவர்களது உரைகல், தங்கத்தின் தரத்தை மட்டுமே நிர்ணயம் செய்யப்பயன்படுகிறது. பிரபாகரன் என்ற உரைகல்லை பயன்படுத்துவோர், அதனை தங்களது அரசியல் தொழிலுக்கு முதலில்லாத மூலதனமாகப் பயன்படுத்துகிறார்கள்.*

தொடர்ச்சி 5ம் பக்கம்...........

காலைக்கதிர் Kalaikkathir

# உரைகல்...

4ம் பக்கத் தொடர்ச்சி...........

## மூலமும் முதலும்

இது தவிர, பிரபாகரன் இல்லாத அல்லது பிரபாகரன் எதிர்ப்பு அரசியலும் இன்னமும் இங்கே உள்ளது. அவர்களும் இனப்பிரச்சினை, தீர்வுத் திட்டம் என்ற குண்டு சட்டிக்குள் குதிரை ஓட்டுவதில் மட்டுமே வல்லவர்கள். தற்போது, நாடு தழுவிய உள்ளாட்சி தேர்தல்கள் எதிர்வரும் மாதங்களில் அரங்கேறும் என்ற செய்தி உலா வரும்போது, அவர்கள் கடந்த கால அரசியலையே தொடர்ந்து எதிர்காலத்திற்கும் முன்னெடுத்து வருகின்றனர்.

அவர்களைப் பொறுத்தவரையில், இனப்பிரச்சினைக்கு அப்பாலும் தமிழ் மக்களுக்கு, அன்றாட வாழ்க்கை மற்றும் வாழ்வாதார பிரச்சினைகள் எதுவும் இல்லை. அல்லது, இனப்பிரச்சினையே தமிழ் மக்களது அனைத்துப் பிரச்சினைகளுக்கும் மூலமும் முதலும் ஆகும்.

இத்தகைய எண்ணவோட்டத்திலும் பிசிறுகள், தவறுகள் உள்ளன. எப்போது, இவர்கள் அனைவருமே தேர்தல் அரசியலுக்கு தொடர்ந்து முகம் கொடுத்து வருகிறார்களோ, அப்போதே தங்களது அரசியலை மக்களின் தேவைகளுக்கும் எதிர்பார்ப்புகளுக்கும் ஏற்ப டியூன் செய்து கொள்ள வேண்டும். ஆனால், அவ்வாறு செய்ய அவர்களுக்குத் தெரியவில்லை. அல்லது மனமில்லை. இதுவும் பிரபாகரனை உரைகல்லாக பயன்படுத்துவோரின் நோயைப் போன்றதுதான்.

அவை நோய் மட்டுமல்ல, ஒரு மாயையும்கூட என்பதை சமகால இளம் தமிழ் வாக்காளர்கள் குறிப்பாக உணர்த்தி வருகின்றனர். ஆனால், தமிழ் அரசியல் தலைமைகள்தான், சுவரில் எழுதப்பட்டுள்ள சித்திரத்தை பார்த்து, புரிந்து, அறிந்து கொள்ள முடியாதவர்களாகி விட்டார்கள்.

இதற்கு அப்பாலும் சென்று, தீர்வு திட்டம் குறித்த இன அரசியல் செய்வோர் மற்றொன்றையும் கவனத்தில் கொள்ளவேண்டும். தமிழ் மக்களைக பொறுத்த வரையில், குறிப்பாக இளைய தலைமுறை வாக்காளர்களை பொறுத்த வரையில், எப்போது அரசு தீர்வு திட்டம் குறித்து பேசுகிறதோ, எப்போது அது குறித்து முன்னெடுப்புகளை எத்தனிக்கிறதோ, அப்போது மட்டுமே, அது குறித்து கவலைப்பட தங்களை பழக்கிக்கொண்டு விட்டார்கள்.

இந்த ஆளும்தரப்பைப் பொறுத்தவரையில், முதல் இரண்டு ஆண்டுகள் வரை இனப்பிரச்சினை உள்ளிட்ட புதிய அரசியல் அமைப்பு குறித்து எந்தவித முன்னெடுப்புகளையும் செய்யப் போவதில்லை என்று ஜனாதிபதி அனுர குமார திசநாயக்க எப்போதோ அறிவித்து விட்டார். தென்னிலங்கை அரசியலிலும், புதிய அரசமைப்பு, அடுத்த ஜனாதிபதி தேர்தலுக்கான விடயம் மட்டுமே என்றே ஆளும் ஜேவிபி தலைமையிலான கூட்டணி கருதுகிறது.

## யாருக்காக 'கரி நாள்'?

இந்தப் பின்னணியில், இப்போதே இன அரசியல் குறித்து மட்டுமே பேசி வரும் தமிழ் தரப்புகள், நததத ளுமன்ற தேர்தலை போலவே, உள்ளாட்சி தேர்தலிலும், ஆளும் தரப்பினிடம் அடி வாங்க போகிறார்களோ என்ற கேள்வி எழுகிறது. அது நியாயமான கவலையும் கூட!

இவை எல்லாம் போதாது என்று, எதிர்வரும் பெப்ரவரி 4, சுதந்திர தினத்தை 'கரி நாளாக' அனுஷ;டிக்க வேண்டும் என்று, முன்பு சரித்திரம் படைத்த 'பொத்துவில் முதல் பொலிகண்டி வரை' (பி2பி) அமைப்பு அறைகூவல் விடுத்துள்ளது. அந்த அமைப்பின் இணை ஒருங்கிணைப்பாளர்களான வேலன் சுவாமிகள் மற்றும் அருட்பணி ஜோசப் மேரி ஆகிய இருவர் பெயரில் வெளிவந்துள்ள அறிக்கையில் அவர்கள் புதிதாக எதனையும் கூறிவிடவில்லை.

குறிப்பாக வேலன் சுவாமிகளின் இதுவரை அடைய முடியாத அரசியல் அஷ்ரீபிலாஷைகளுக்கான வடிகாலாகவே அந்த அறிக்கையும் அதன் கரி நாள் கோரிக்கையும் தெரிகிறது. இதுவும், பி2பி வெற்றி அடையும் தறுவாயில் அடையாளம் காணப்பட்ட நோய்.

இதற்கான வைத்தியமும் வடக்கு மற்றும் கிழக்கில் உள்ள தமிழ் வாக்காளர்கள் கையில் மட்டுமே. இடைப்பட்ட காலத்தில், தங்களது அறிவிப்பு குறித்து, இந்த இருவரும் தங்களுடன் தோளுக்கு தோள் நின்ற பிற சமூக, சமுதாய, அரசியல் தலைமைகளுடன் கலந்தாலோசித்தார்களா, என்பதும் கேட்கப்பட வேண்டிய கேள்வி!

# சம்மாந்துறையில் கைகலப்பு; மாமனார் பரிதாபமாகச் சாவு

(தில்சாத் பர்வீஸ்)

மாமனார் மருமகன் இடையே கைகலப்பு இடம்பெற்ற போது மாமனார் சம்பவ இடத்திலேயே மரணமடைந்துள்ளார்.

இந்தச்சம்பவம் புதன்கிழமை இரவு வேளையில் இடம்பெற்றுள்ளது.

அம்பாறை மாவட்டம் சம்மாந்துறை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட தென்னம்பிள்ளை கிராமம் பகுதியில் புதன்கிழமை இரவு வேளையில் மாமனார் மருமகன் இடையே கைகலப்பு இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவம் தொடர்பில் பொலிஸாரின் ஆரம்பக் கட்ட விசாரணையில் மாமனார் மருமகன் இடையே குடும்ப பிரச்சினை காரணமாக குறித்த மரணம் இடம்பெற்றுள்ளதாகத் தெரியவருகிறது.

இச்சம்பவம் சம்மாந்துறை தென்னம்பிள்ளை கிராமத்தில் அமைந்துள்ள மகளின் வாடகை வீட்டு முற்றத்திலேயே இடம்பெற்றுள்ளது.

இதன் போது, மத்திய வீதி, மலையடிக்கிராமம் 01 பகுதியைச் சேர்ந்த (வயது 55) என்பவரே மரணமடைந்துள்ளார்.

மாமனார் மருமகன் இடையே நடைபெற்ற கைகலப்பின் போதுதாக்கப்பட்டு மரணமடைந்தாரா ஃ மாரடைப்பு காரணமாக மரணமடைந்தாரா என்பது தொடர்பாக பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இதே வேளை, சம்பவத்தில் சந்தேக நபரான ஆலிம் சேனை 02, மூதூர் பகுதியைச் சேர்ந்த 37 வயதுடைய மருமகனை சம்மாந்துறைப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கைகலப்பில் மரணமடைந்தவரின் சடலம் பிரேத பரிசோதனையின் பின்னர் உறவினர்களிடம் ஒப்படைக்கப்படும் என பொலிஸார் தெரிவித்தனர்.

இதுதொடர்பான மேலதிக விசாரணைகளை சம்மாந்துறை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.


முல்லை ஓய்வு நகர்
Mullai Rest City

எழுதுமட்டுவாழ் நகரில்
2 பரப்பு, 4 பரப்பு காணிகள் விற்பனைக்கு!

இயற்கையான சூழலில் உங்களின் ஓய்வுகாலத்தினை மகிழ்ச்சியாகவும் ஆரோக்கியத்துடனும் வாழுங்கள்!

உங்களுக்கு விரும்பியவாறு வீடுகளை அமைத்துக்கொள்ளலாம்.
மாசற்ற இயற்கையான சூழல் – பாரம்பரிய முறையிலான வாழ்க்கை – ஆரோக்கிய நிலையங்கள்
அத்தியாவசிய தேவைகள் அனைத்தும் அருகில் – பொழுதுபோக்கு அம்சங்கள்

முதியோர் பராமரிப்பு வசதி – தியான மண்டபம் – மூலிகைத்தோட்டத்துடன் மூலிகைக் குளியல்
அறிவார்ந்த நூல்கள் அடங்கிய நூலகம் – உள்ளூர் வானொலிச் சேவை
ஒன்றுகூடல் நிலையம் – பாரம்பரிய உணவகம் – பல்பொருள் அங்காடி
சுத்தமான குடிநீர் விநியோகம் – யோகா நிலையம்
விருந்தினர் விடுதி – சிறுவர் பூங்கா
ஆயுள்வேத சிகிச்சை நிலையம்
மீன்பிடி குளம் – தாரா பண்ணை
பூங்கா – நடைபயிற்சிப் பாதை – உடற்பயிற்சிக் கூடம்
உள்ளக விளையாட்டுத் தொகுதி – விளையாட்டு மைதானம்



SUPERMARKET

4th Project

இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்
Good Gift Property Developers (Pvt) Ltd



தொடர்புகளுக்கு: 0777 43 5557

காலைக்கதிர் Kalaikkathir

# கொழும்பு மஸ்ஜிதுல் சஜீர் பள்ளியில் புனித மிஃராஜ் தின தேசிய நிகழ்வு

(ஸாகிர்)

1446 ஹிஜ்ரி ஆண்டுக்கான புனித மிஃராஜ் தின தேசிய நிகழ்வு கடந்த திங்கட்கிழமை இரவு கொழும்பு - 10, மஸ்ஜிதுல் சஜீர் பள்ளிவாசலில் இரவு 7.45 மணி முதல் இடம்பெற்றது.

முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களம் கொழும்பு -10, மஸ்ஜிதுல் சஜீர் பள்ளிவாசலுடன் இணைந்து இந்நிகழ்வை ஏற்பாடு செய்திருந்தது.

முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் எம்.எஸ்.எம். நவாஸ் தலைமையில் இடம்பெற்ற மேற்படி நிகழ்வுக்கு முஸ்லிம் திணைக்களத்தின் உதவிப் பணிப்பாளர்களான என்.நிலூபர், அலா அஹமட், கணக்காளர் முஹம்மட் நிப்ராஸ் உட்பட திணைக்கள அதிகாரிகள், முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் நிகழ்ச்சி களுக்கான ஒருங்கிணைப்பாளர் அஷ்ஷெய்க் எம்.எம்.எம்.முப்தி, மஸ்ஜிதுல் சஜீர் பள்ளிவாசல் தலைவர் மௌலவி ஏ.சீ.எம். பர்ஸாத் உட்பட உலமாக்கள், அரச உயர் அதிகாரிகள், கொழும்பு பள்ளிவாசல் தர்ம கர்த்தாக்கள், பள்ளிவாசல் குழு உறுப்பினர்கள், வர்த்தகப் பிரமுகர்கள் மற்றும் ஜமா அத்தார்கள் எனப்பலரும் கலந்து சிறப்பித்தனர்.

முஸ்லிம்சமயபண்பாட்டலுவல்கள்திணைக்களத்தின் பணிப்பாளர்எம்.எஸ்.எம். நவாஸ் நிகழ்வில்வரவேற்புரை நிகழ்த்தியதோடு, மஸ்ஜிதுல் சஜீர் பள்ளிவாசலின் பிரதம இமாம் அஷ்ஷெய்க் அப்துல் அஸீஸ் (பௌசி)



மிஹ்ராஜ் இரவின் முக்கியத்துவத்தைப்பற்றி பயான் நடாத்தினார்.

அத்தோடு, விசேட சிறப்பு பிரார்த்தனையை (துஆ) மஸ்ஜிதுல் சஜீர் பள்ளிவாசலின் பிரதம இமாம் காரி அஷ்ஷெய்க் அப்துல் அஸீஸ்

நவவி நிகழ்த்தியதோடு, கொழும்பு-10, மஸ்ஜிதுல் சஜீர் பள்ளிவாசலின் தலைவர் மௌலவி ஏ.சீ.எம். பர்ஸாத் நிகழ்வில் நன்றியுரை நிகழ்த்தினார்.

புனித மிஃராஜ் தின இரவு நிகழ்வுகள் யாவும் இலங்கை வானொலி முஸ்லிம் சேவையில் நேரடி அஞ்சல் செய்யப்பட்டதும் குறிப்பிடத்தக்கது.

# ஆலயங்கள் நாட்டில் அதிகரித்தாலும் ஆன்மீகம் ஏன் இன்னும் வளரவில்லை?

## இலங்கை கல்வி அபிவிருத்திக் குழுமக் காப்பாளர் சச்சிதானந்தன் கேள்வி

(சுபேசன்)

ஆலயங்கள் கடந்த காலங்களை விட வெகுவாக அதிகரித்து வருகின்ற போதிலும் ஆன்மீகம் வளர்ந்து அதனூடாக குற்றச்செயல்கள் குறைந்ததாகத் தெரியவில்லை என இலங்கை கல்வி அபிவிருத்திக் குழுமத்தின் காப்பாளர் ந.சச்சிதானந்தன் சுட்டிக்காட்டியுள்ளார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை உசன் இராமநாதன் மகா வித்தியாலயத்தில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் மேற்படி தெரிவித்திருந்தார்.

இது தொடர்பாக மேலும் அவர் கருத்துத் தெரிவிக்கையில்; -

இன்று சமூகத்தில் பாடசாலை மாணவர்கள் மற்றும் பல்கலைக்கழக மாணவர்கள் மது மற்றும் போதைவஸ்துப் பாவனைக்கு அடிமை யாவது அதிகரித்துள்ளது. இதனால்களவு,கொலை உள்ளிட்ட சட்டவிரோதச் செயல்கள் அதிகரித்துக் காணப்படுகின்றன.



இளம் பராயத்தினர் மாத்திரமல்ல அதிகாரிகள் கூட இலஞ்சம்-ஊழல் என பாரிய சட்டவிரோத செயல்களில் ஈடுபட்டு வருகின்றனர்.

முன்பள்ளிப் பராயத்தில் இருந்து நல்ல பழக்க வழக்கங்களை ஏற்படுத்துவதன் ஊடாகவே இவ்வாறான சமூகத்திற்கு ஒவ்வாத செயற்பாடுகளைக் கட்டுப்படுத்த முடியும்.

எமது பிரதேசங்களில் மக்கள் தொகை வெகுவாகக் குறைந்துவிட்டது.ஆனால் ஆலயங்களின் எண்ணிக்கை அதிகரித்த வண்ணம் உள்ளன.

அத்துடன் திருவாசக அரண்மனை,திருக்குறள் அரண்மனை,திருமந்திர அரண்மனை என கட்டி கும்பாபிஷேகம் செய்யப்படுகின்றது.

இவ்வாறு ஆலயங்கள் அதிகரித்து ஆன்மீகம் வளர்ந்திருந்தால் குற்றச்செயல்கள் குறைந்திருக்க வேண்டும். ஆனால்சமூகத்தில்குற்றச்செயல்கள் நாளுக்கு நாள் அதிகரித்தே காணப்படுகின்றன.

- என மேலும் அவர் சுட்டிக்காட்டியிருந்தார்.






# வவுனியாவில் பொலிஸாரால் குருதிக் கொடை வழங்கினர்

வவுனியாதலைமைப்பொலிஸ்நிலையத்தில் இரத்தானநிகழ்வுஒன்றுமுன்னெடுக்கப்பட்டது.

வவுனியா சமுதாயப் பொலிஸ் குழுவின் ஏற்பாட்டில் வவுனியா வைத்தியசாலையில் ஏற்பட்டுள்ள குருதித் தேவையை முன்னிட்டு குறித்த இரத்த தான நிகழ்வு இடம்பெற்றது.

இதன்போது சமுதாய பொலிஸ் குழு அங்கத்தவர்கள், பொலிஸார், பாதுகாப்பு தரப்பினர், பொது மக்கள் எனப் பலரும் கலந்து கொண்டு இராத்ததானம் வழங்கி வைத்தனர்.

இந்நிகழ்வில் வவுனியா மாவட்ட உதவிப் பொலிஸ் அத்தியட்சகர், தலைமைப் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி, சமுதாய பொலிஸ் குழு பொறுப்பதிகாரி உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர். 100







# வர்த்தகரை மிரட்டிய ஆசிரியை

வவுனியா, வைரவபுளியங்குளம் பகுதியில் தரம் 4 வகுப்பிற்கான வேலைத்திட்டத்தை பெற சென்ற தேசிய பாடசாலை ஆசிரியை ஒருவர் தாமதமாக தருவதாக கூறிய வர்த்தக நிலைய உரிமையாளருக்கு ஆள்களை அழைத்து மிரட்டினார் என்று குற்றஞ்சாட்டப்படுகின்றது.

புதன்கிழமை பிற்பகல் இடம்பெற்ற இச் சம்பவம்தொடர்பில்மேலும்தெரியவருவதாவது

வவுனியா, வைரவபுளியங்குளம் பகுதியில் உள்ள வர்த்தக நிலையம் ஒன்றுக்கு சென்ற தேசிய பாடசாலை ஒன்றின் ஆசிரியர் தரம் 4 வகுப்பிற்குரிய வேலைத்திட்டம் தருமாறு கோரியுள்ளார். வர்த்தக நிலைய உரிமையாளர் வேறு வேலைகள் இருப்பதால், ஒரு மணி நேரத்தில் அச்சிட்டு வழங்குவதாக தெரிவித்த போது அதற்குரிய பெறுமதியை உடனடியாக கூறுமாறு குறித்த ஆசிரியர் கோரியுள்ளார்.

அச்சிடப்பட்ட பின்னரே பக்கங்களின் எண்ணிக்கையைப் பார்த்து விலையை நிர்ணயிக்க முடியும் என வர்த்தக நிலையத்தின் உரிமையாளர் கூறிய போது, விலைகள் ஞாபகத்தில் வைத்திருக்க வேண்டும் என அவருடன் தர்க்கத்தில் ஈடுபட்ட ஆசிரியை தொலைபேசியில் அழைப்பு எடுத்து இருவரை அழைத்து குறித்த வர்த்தக நிலைய உரிமையாளரை அச்சுறுத்தியுள்ளார்.

உளவியல் ரீதியாக பாதிக்கப்பட்ட குறித்த வர்த்தக நிலைய உரிமையாளர் வவுனியா பொலிஸ்நிலையத்தில் முறைப்பாட்டை பதிவு செய்யவுள்ளதாகவும் தெரிவித்துள்ளார். 100

காலைக்கதிர் Kalaikkathir

உ

முருகன் துணை

## நல்லூர் சைவத் தமிழ்ப் பண்பாட்டுக் கலைக் கூடல்

# செவ்வழி நயனம்

# அழுதால் உன்னை பெறலாமே

பிரம்மனும் விஷ்ணுவும் அடிமுடி காணாத ஆனந்தக்கூத்தர், அடியவருக்கு அடியவர். கல்லால மரத்தடியில் ஞானம் உபதேசித்தவர். கங்கையை சடையில் தரித்தவர், மான் மழுவுடன், சுடலையில் ஆடும் பித்தர் அவர். அவரை அடைதல் தான் ஆன்ம மோட்சத்துக்கான ஒரே வழி. அவ் இறைவனை அடைதலுக்கான முதல் படி, உணர்தல்.

இறைவனை உணர்தல் என்பது ஒரு கற்கை நெறி அல்ல. ஒரு செயல்பாடு அல்ல. அது ஒரு தவம். மனத்தால் உணர்தல், அதனை உரைத்தல், உருகி மெய்ப்படுத்தல், அவனால் - அவன் அருளால் ஆற்றுப்படுத்தப்படல் அல்லது தடுத்தாட்கொள்ளப்படல் என பலவாறான நிலைகளை கடத்தல். அதற்கு இறைவனை அகக்கண்களால் அறிய முற்பட வேண்டும். இறைவனை அகக்கண்களால் அறிதலுக்கு ஞானமும் தேவையாக இருக்கும், ஆத்மாவின் பக்குவத்தன்மையும் தேவையான ஒன்று. ஞானம் நாவினால் நவில்பது அன்று. அது உணர வேண்டியது. அந்த ஞானமே பக்குவத்தையும் தரவல்லது.

ஞானத்தை உணர்தல் என்பதே அஞ்ஞானத்தை போக்கலுக்கான படிநிலை. ஞானத்தை உணர குருவழியே ஒரே மார்க்கம். ஆனால், குரு எனப்படுவது ஒரு ஆசிரியரோ, அல்லது ஆசானோ அல்ல. குரு ஞானத்தை ஆத்மாவுடனான உரையாடலில் உபதேசிப்பவர். தேடல்களுக்கு கேள்விகளுக்கும் பதில் தருபவர் அல்ல - மாறாக தேடலையும் கேள்விகளையும் அடிப்படையாக கொண்டு ஞானத்தை விருத்தி செய்ய வழிகளை சமைப்பவர். அதனாலேயே குரு எப்போதுமே சிவமாக பாவிக்கப்படுகிறார்.

அப்படிப்பட்ட ஞான குருவை அடைதலுக்கான ஒரே வழி, பக்தி மார்க்கம். சிவனை, அப்பனாக, அம்மையாக, நண்பனாக, மெய் அன்புடன் காதலித்து மனம் உருகி வேண்டுதல். மாணிக்கவாசகர் கூறியது போல, 'அழுதால் உன்னை பெறலாமே' என்பது தான் பக்தியின் விளக்கம். ஆதலால், இறைவனை அடைதலுக்கு - அவனை உணர்தல் அவசியமாகின்றது. உணர்தலுக்கு, பக்தி மார்க்கம் அவசியமாகின்றது.

இறைவன் ஆனந்தமே வடிவானவன். பொன்னோ, பொருளோ, கல்விச் சிறப்போ, சமுதாய நிலையோ அவனுக்கு எதுவுமல்ல. தூய உள்ளத்திலிருந்து அன்பை மட்டுமே எதிர்பார்க்கும் அவனுக்கு, யாவரும் சமம். அந்த பரமானத்த கூத்தரின் பாதார விந்தங்களை இறுக பற்றிக்கொள்வோம். அது தான் ஆன்ம மோட்சம். அதற்கு உள்ளன்போடு காரியமாற்றுவோம். பெரிது சிறுது, வல்லவன் இழைத்தோன் என பேதங்களை கடந்து, பக்தி மார்க்கம் போவோமேயானால், எம் கரம் பிடித்து ஞானம் போதிக்க, மார்க்கண்டேயனை ஆட்கொண்டவர் எம் அருகிலேயே நிற்கின்றார் என்பதை உணருவோம். அதுவே எங்களை வழிப்படுத்தும்.




காலைக்கதிர் Kalaikkathir

## 3 உபகுழுக்கள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விமான சேவைகள் அலுவல்கள் அமைச்சர் பிமல் ரத்நாயக்க தலைமையில் இந்த ஆலோசனைக் குழுக் கூட்டம் நடைபெற்றது.

போக்குவரத்து தொழிற்துறையிலுள்ள தொழிலாளர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் நோக்கில் முதலாவது உப குழு நியமிக்கப்பட்டது.

நாடாளுமன்ற உறுப்பினர்களான ஜகத் விதான, திணிந்து சமன், தேவானந்த சுரவீர ஆகியோர் இதன் உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

போக்குவரத்துத்துறை சம்பந்தமான சட்டரீதியான கட்டமைப்பை வலுப்படுத்தி வழிநடத்துதல் தொடர்பில் மற்றுமொரு உப குழு நியமிக்கப்பட்டுள்ளது.

நாடாளுமன்றஉறுப்பினர்களானலக்மாலி ஹேமச்சந்திர, சுகத் வசந்த டி சில்வா, தனுர திஸாநாயக்க, சுஜீவ திசாநாயக்க இதன் உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

போக்குவரத்துத்துறையுடன்தொடர்புடைய மேலதிகசேவைகளைஉருவாக்குவதன்மூலம் வருமானம்ஈட்டுவதை நோக்காகக் கொண்டு மூன்றாவது உப குழு நியமிக்கப்பட்டுள்ளது.

பிரதி அமைச்சர் சதுரங்க அபேசிங்க, நாடாளுமன்ற உறுப்பினர்களான ரவீந்திர பண்டார மற்றும் தனுஷ்க ரங்கநாத் ஆகியோர் இதன் உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

## அரசியல்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்ததாவது:

பெரும்போக விவசாய விளைச்சல் அறுவடை தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இம்முறை 2.9 மில்லியன் மெற்றிக் தொன் நெல் விளைச்சல் கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. நெல்லுக்கான உத்தரவாத விலை இன்னும் ஓரிரு நாட்களில் நிர்ணயிக்கப்படும்.

விவசாயிகளிடமிருந்து நேரடியாக நெல்லை கொள்வனவு செய்வதற்கு உரிய ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளன. எதிர்வரும்சித்திரைபுத்தாண்டுகாலப்பகுதியில் அரிசி உட்பட அத்தியாவசிய உணவு பொருட்களுக்கு தட்டுப்பாடு ஏற்படாது.

சந்தையில் நிலவும் தேங்காய் தட்டுப்பாடு மற்றும் விலையேற்றம் குறித்து வர்த்தகம், உணவு பாதுகாப்பு, பெருந்தோட்டத்துறை மற்றும் கைத்தொழில் அமைச்சு ஆகிய மூன்று அமைச்சுக்களை ஒன்றிணைத்து விசேட நடவடிக்கை வகுக்கப்பட்டுள்ளது.

2024 ஆம் ஆண்டு 3000 முதல் 3100 மில்லியன் தேங்காய்கள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளன. தேவையை காட்டிலும் கேள்விஅதிகமாகவேகாணப்படுகிறது. ஆகவே தேங்காய் தட்டுப்பாட்டுக்கு தொழில்நுட்ப ரீதியில் தீர்வு முன்வைக்கப்படும்.

கடந்த காலங்களில் அரச நிதியை மோசடி செய்து அரச அதிகாரத்தில் தப்பித்துக் கொண்டவர்கள் தற்போது கலக்கமடைந்துள்ளார்கள். ஊழல் மோசடியாளர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கும் போது அரசியல் பழிவாங்கள் என்று குறிப்பிட்டுக்கொண்டுஊழல்வாதிகள்தங்களை பாதுகாத்துக் கொள்ள முயற்சிக்கிறார்கள். மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிக்கமைய ஊழல்வாதிகளை சட்டத்தின் முன் முன்னிலைப்படுத்துவோம்.

முன்னாள் ஜனாதிபதிகளுக்கு அரச உத்தியோகபூர்வ இல்லம் வழங்கப்பட வேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. அதனை ஏற்றுக் கொள்கிறோம் ஆனால் 30 ஆயிரத்துக்கும் அதிகமான சதுர அடி பரப்பிலான வீடு வழங்கப்பட வேண்டும் என்று சட்டத்தில் குறிப்பிடப்படவில்லை.

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவுக்கு மூன்று மகன்கள் உள்ளார்கள். மூத்த மகனான நாமல் ராஜபக்சவின் சொத்து மதிப்பு எவ்வளவு, இளைய மகன் பல கோடி ரூபா நிதி மோசடி செய்து கடந்த வாரம் கைது செய்யப்பட்டார். மஹிந்த ராஜபக்சவை அவர்களின் பிள்ளைகளால் பார்த்துக் கொள்ள முடியாவிடின் அவருக்கு வீடு வழங்குவது ஒன்றும் பிரச்சினைக்குரிய விடயமல்ல என்றார்.


காலைக்கதிர் ஆசிரியர்பீட தொடர்புகளுக்கு

076 3983858

மின்னஞ்சல் முகவரி:
kalaikkathirnews@gmail.com





# பாதுகாப்பான புலம்பெயர் தொழில் பெறுவது குறத்து நடமாடும் சேவை

(சகாதேவராஜா)

மனித அபிவிருத்தி தாபனம்,காரைதீவு பிரதேச செயலகத்துடன் இணைந்து பாதுகாப்பான புலம்பெயர் தொழில் (வெளிநாட்டு வேலை) தொடர்பான நடமாடும் சேவை காரைதீவு பிரதேச செயலகத்தில் நடைபெற்றது

காரைதீவு பிரதேச செயலாளர் ஜி. அருணன் தலைமையில் நடைபெற்ற இந்த நடமாடும் சேவைக்கு அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் சிவ. ஜெகராஜன் பிரதம அதிதியாக கலந்துகொண்டு ஆரம்பித்து வைத்தார்.

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு கல்முனை பிராந்திய இணைப்பாளர் ஏசிஏ. அஸிஸ், கல்முனை சட்ட உதவி ஆணைக்குழு சட்ட உத்தியோகத்தர் வி.ரி.. ஹசினா, காரைதீவு உதவி பிரதேச செயலாளர் எஸ். பார்த்திபன், மனித அபிவிருத்தி தாபன உதவி இணைப்பாளர் எம். ஐ. றியால் மற்றும் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியக அம்பாறை மாவட்ட காரியாலய அதிகாரிகள் மற்றும் அதனுடன் தொடர்புடைய பல அரச அதிகாரிகளும் கலந்துகொண்டனர்.

நடமாடும் சேவைக்கு வருகைதந்த பொதுமக்களுக்கு பாதுகாப்பான புலம்பெயர் தொழில் தொடர்பான பிரச்சினைகளுக்கான தீர்வுகளும், ஆலோசனைகளும், வழிகாட்டல்களும் வழங்கியதுடன் முறைப்பாடுகளும் ஏற்றுக்கொள்ளப்பட்டு அடுத்த கட்ட நடவடிக்கைகளுக்கான ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டன.







# அம்பாறைத் தமிழ் மக்களை நேசித்த மாமனிதர் மாவை

## முழுத் தமிழினத்திற்கே பேரிழப்பு என்கிறார் ஜெயசிறில்

(சகா தேவராஜா)

அம்பாறைமாவட்டத்தையும்,அம்பாறை தமிழர்களையும்நேசித்தஒருபெரும்தலைவர். இலங்கைத்தமிழரசு கட்சியின் இருக்கக்கூடிய அம்பாறை மாவட்டத்தை நன்கு தெரிந்த துணிச்சல் மிக்க பேச்சாளர் .எனது அரசியல் பாதையிலே என்னை இந்த நிலைக்கு உயர செய்ய வைத்த அரசியல் ஆசான். என்றும் மறக்க முடியாத மாமனிதன். உங்களுடைய இழப்பு வடக்கு கிழக்கு தமிழர்களுக்கு மாத்திரமல்ல உலகத்தில் வாழ்கின்ற தமிழர்களுக்கு பேரிழப்பாக கருதுகிறேன்.

- இவ்வாறு காரைதீவு பிரதேச சபையின் முன்னாள் தவிசாளரும் இலங்கை தமிழரசுக் கட்சியின் காரைதீவு பிரதேச தலைவருமான கிருஷ்ணபிள்ளை ஜெயசிறில் தனது அனுதாபச் செய்தியில் கூறியுள்ளார்.

அதில் மேலும் கூறுகையில் -

இலங்கைத் தமிழரசு கட்சியின் முன்னாள் தலைவரும் தமிழ் தேசியப் பாதையில் தமிழீழ விடுதலைப் புலிகளின் காலப்பகுதியில் இருந்து ஜனநாயக ரீதியாக எமது மக்களுக்காக தன்னால் இயன்ற செயல்பாடுகளை இளவயதிலிருந்து பல சிறைவசம் சென்று தலையில் பட்ட அடியின் வேதனையை ஒவ்வொரு பிரசார மேடையிலும் கூறிக் கொள்வார் . அந்த அடியின் தாக்கமே இன்று அவர் உயிரே பிரிய காரணம்.

உங்களைப் போன்று ஒரு பொதுநலம் உள்ள ஒரு தலைவரை இனி இலங்கை தமிழரசு கட்சியில் காண முடியுமா? பதவிக்காக பறக்கின்றவர்கள் மத்தியில் தமிழ் இனத்திற்காக உங்கள் வாழ்நாள் அனைத்தையும் அர்ப்பணித்த பெருந்தலைவர்



சம்மந்தர் ஐயா வழியிலே பயணித்த நீங்கள் இன்று அவரிடத்திலே சென்று விட்டீர்கள் உலகத்தில் தமிழ் தேசிய வாதிகளை உலுக்கிய மிகப்பெரும் துக்க நாளாக கருத முடிகின்றது.

பிறந்தவர் இறந்தே ஆக வேண்டும். இது எப்படி இருந்தாலும் எமது இனத்தின் விடுதலைக்காய் உங்கள் வாழ்நாள் செயற்பாடை மறக்க முடியாது மனம் வருந்துகின்றோம்.

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர், மதிப்பிற்குரிய மாவை சேனாதிராஜா ஐயா அவர்கள் சிகிச்சை பலனின்றி இறைவனடி சேர்ந்தார் ஆழ்ந்த கவலை. ஆழ்ந்த அனுதாபம் .ஐயாவின் ஆத்மா சாந்தி அடைய எல்லாம் வல்ல இறைவனை பிரார்த்தனை செய்கின்றேன். - என்றுள்ளார்.

# சம்மாந்துறை முஸ்லிம் மகளிர் வித்தி வித்தியாரம்ப விழா நேற்று சிறப்புற்றது

(தில்சாத் பர்வீஸ்)

சம்மாந்துறையில் நேற்று ஆரம்பக் கல்வியை கற்க வருகின்ற மாணவர்களை வரவேற்கின்ற வித்தியாரம்ப விழா பல்வேறு பாடசாலைகளில் இடம் பெற்றது.

இதில் சம்மாந்துறை முஸ்லிம் மகளிர் வித்தியாலய வித்தியாரம்ப விழா வித்தியாலயத்தில் இடம்பெற்றது.

நிகழ்வில் பிரதம மற்றும் விசேட அதிதி எனப்பலர் கலந்துகொண்டனர் சம்மாந்துறை வலயக்கல்வி அலுவலக உத்தியோத்தர்கள் என பலர் இங்கு வருகைதந்து சிறப்பித்தனர்.

நிகழ்வின்தலைமைசம்மாந்துறைமுஸ்லிம் மகளிர் வித்தியாலய முதல்வர் ஏ.முத்தலிப் அதிபர் அவர்களுடைய தலைமையில்



இடம்பெற்றது

நிகழ்வில் மாணவர்களை வரவேற்கும் முகமாகபல்வேறுகலைநிகழ்ச்சிகள்,பரிசுகளும் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# சாய்ந்தமருதில் வித்தியாரம்ப விழா

(ஸாகிர்)

சாய்ந்தமருது அரசினர் முஸ்லிம் கலவன் பாடசாலையின் தரம் ஒன்றுக்கு புதிதாக மாணவர்களை வரவேற்கும்வித்தியாரம்பவிழா'புதியவர்களின் நாள்' எனும் தொனிப்பொருளில்பாடசாலையின் புதிய கேட்போர் கூடத்தில் நேற்று (வியாழக்கிழமை) இடம்பெற்றது.

கல்லூரியின் அதிபர் எம்.ஐ.எம். இல்யாஸ் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில், கல்முனை வடக்கு ஆதார வைத்தியசாலையின் கண்வைத்திய அதிகாரி டாக்டர் நஸ்ரின் சாஜிதா கமால் நிஸாத் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டதோடு, கௌரவ அதிதியாக பொறியியலாளர் எம்.சீ.கமால் நிஸாத் மற்றும் ஆரம்பக் கல்வி ஆசிரிய ஆலோசகர் எஸ்.எம்.எம். அன்சார் ஆகியோர் நிகழ்வில் கௌரவ அதிதிகளாகவும் கலந்து சிறப்பித்தனர்.

பாடசாலையின் பழைய மாணவரும் அக்கரைப்பற்று வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பொறியியலாளருமான எம்.ஐ.எம்.ரியாஸ், நிகழ்வில் அதிதியாகக் கலந்து கொண்டார்.

தரம்இரண்டுமாணவர்களால் புதிய மாணவர்கள் மாலை அணிவித்து இனிப்பு வழங்கி வரவேற்கப்பட்டனர்.

பிரதி அதிபர், உதவி அதிபர் உட்பட பகுதித்தலைவர்கள், ஆசிரியர்கள், பாடசாலை அபிவிருத்தி குழுவினர், பழைய மாணவர் சங்கத்தினர் மற்றும் நலன் விரும்பிகள் முதலாம் தரத்திற்கு புதிதாக இணைத்துக் கொள்ளப்பட்டுள்ள புதிய மாணவர்கள், பெற்றோர்கள் எனப் பலரும் நிகழ்வில் கலந்து கொண்டனர்.



# வவுனியா மாவட்டத்தில் வெள்ளத்தால் பாதிப்படைந்த விவசாயிகளுக்கு ரூபாய் 16.817 மில்லியன் இழப்பீடு

வவுனியா மாவட்டத்தில் வெள்ளத்தால் பாதிப்படைந்த விவசாயிகளுக்கு 16.817 மில்லியன் ரூபா நட்ட ஈட்டினை வழங்கும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளதாக கமநல அபிவிருத்தி உதவி ஆணையாளர் க.விமலரூபன் தெரிவித்தார்.

கடந்த வருடம் நவம்பர் மாதம் வெள்ளத்தால் நெற்பயிர்கள்பாதிப்புக்குள்ளானவிவசாயிகளுக்கான நட்டஈடு கமநல காப்புறுதி சபையின் ஊடாக பொலன்னறுவை, முல்லைத்தீவு, திருகோணமலை மற்றும் வவுனியா மாவட்டங்களில் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு வழங்கப்படவுள்ளன.

அந்தவகையில் வவுனியா மாவட்டத்தில் 1397.2 ஏக்கர் அளவில் பாதிக்கப்பட்டுள்ளதுடன், இவ் பாதிப்பிற்காக 1160 விவசாயிகளுக்கு 16.817 மில்லியன் ரூபா நட்ட ஈடு வழங்கப்படவுள்ளது.



குறித்த நட்டஈடானது அடுத்த மாதம் முதல் வாரத்தில் பாதிக்கப்பட்ட விவசாயிகளின் வங்கிக்கணக்கில் வரவு வைக்கப்படவுள்ளது.

இதேவேளை, வவுனியா மாவட்டத்தில் 60,831 ஏக்கரில் பெரும்போக நெற் செய்கை முன்னெடுக்கப்பட்டதுடன், இவ்வருடம் நாட்டில்



ஏற்பட்ட சீரற்ற காலநிலையால் 1160 ஏக்கர் அழிவடைந்துள்ளதாகவும், அதற்கான மதிப்பீட்டு பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்திருந்தார். 100

# ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போரம் ஏற்பாடு செய்த இரு தமிழ் நூல்களின் வெளியீட்டு விழா நேற்று



(ஸாகிர்)

ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போரம் ஏற்பாடு செய்துள்ள இரு தமிழ் நூல்களின் வெளியீட்டு விழா நேற்று வியாழக்கிழமை மாலை 4.30 மணிக்கு கொழும்பு - 07 இலங்கை மன்றக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீம் எழுதியுள்ள 'நாங்கள் வேறானவர்கள் அல்லர் ; மண்ணின் வேரானவர்கள்' என்ற நூலும் பேராசிரியர் ராஜன்ஹூல் ஆங்கிலத்தில் எழுதிய உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பான ஆங்கில நூலின் தமிழ் மொழி பெயர்ப்பான 'உயிர்த்த ஞாயிறு அனர்த்தம் மறைக்கரம் வெளிப்பட்ட போது' என்ற பெயரில் ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போரத்தின் தலைவர் என்.எம்.அமீன் மொழிபெயர்த்து வெளியிட்டுள்ள நூலும் வெளியிட்டு வைக்கப்பட்டன.

இந்நிகழ்வில், ஜனாதிபதி சட்டத்தரணிகளான முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களா ன எம். எம். சுஹைர், எம். ஏ.சுமந்திரன், சிரேஷ்ட ஊடகவியலாளர் மஹிந்த ஹத்தக ஆகியோர் உரையாற்றினர். நூல் விமர்சனத்தை பேராசிரியர் எம்.எஸ்.எம். அனஸ் நிகழ்த்தினார்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம், ஸ்ரீலங்கா மீடியா போரத்தின் தலைவர் என்.எம். ஆமீன் ஆகியோர் நிகழ்வில் உரையாற்றவுள்ளனர்.

இந்த நிகழ்வின் போது இரு நூல்களும் சலுகை விலையில் வழங்கப்பட்டது என ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போரத்தின் செயலாளர் சாதிக் சிஹான் தெரிவித்துள்ளார்.



காலைக்கதிர்
Kalaikkathir

# பச்சிலைப்பள்ளி மீள்குடியேற்றம் பற்றி பிரதேச செயலர் பிரிவில் கலந்தாய்வு

கிளிநொச்சி மாவட்டத்தின் பச்சிலைப்பள்ளி பிரதேச செயலர் பிரிவில் இடம்பெயர்ந்து மீளக்குடியேறாமல் இருக்கும் மக்களை அடிப்படை வசதிகளுடன் மீளக்குடியேற்றி அவர்களுக்குரிய வாழ்வாதாரங்களை உரிய முறையில் பெற்றுக் கொடுப்பது சம்பந்தமான முக்கிய கலந்துரையாடலொன்று நேற்று(வியாழக்கிழமை) இடம்பெற்றது

பச்சிலைப்பள்ளி பிரதேசசெயலர்பிரிவிற்குட்பட்ட முகமாலை, இத்தாவில் மற்றும் வேம்பொடுகேணி ஆகிய கிராமங்களை உள்ளடக்கியதாக முகமாலை கிராம அலுவலர் பிரிவின் பொது நோக்கு மண்டபத்தில் காலை 10.00மணிக்கு நடைபெற்றது.

குறித்த கலந்துரையாடல் கிளிநொச்சி மாவட்ட பதில் அரசாங்க அதிபர் எஸ்.முரளிதரன் தலைமையில், பச்சிலைப்பள்ளி பிரதேச செயலாளர் த.ஜெயசீலன் பங்குபற்றலுடன் நடைபெற்றது.

இங்கு மாவட்ட பதில் அரசாங்க அதிபர் எஸ்.முரளிதரன் கருத்துத் தெரிவிக்கையில் -

நாட்டில் நிலவிய கடந்த கால உள்நாட்டு யுத்தம் காரணமாக இப்பகுதி அதிகமாக பாதிப்படைந்திருந்தது. குறித்த பகுதிகளில் மீள் குடியேற்றத்தை துரிதப்படுத்தும் நோக்கில் இக் கலந்துரையாடல் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

மக்களாகிய நீங்கள் மீள்குடியேற்ற செயற்பாடுகளுக்கு ஒத்துழைக்க வேண்டும். ஆனால் சில பகுதியினர் ஆரம்பத்தில் மீள்குடியேறுவதாக சம்மதம் தெரிவித்தாலும் பின்னர் தயக்கம் காட்டுகின்றனர். இவ் விடயம் தொடர்பில் தெல்லிப்பழை பிரதேச செயலாளராக கடமை ஆற்றிய காலப்பகுதியில் தமக்கு ஏற்பட்ட அனுபவங்களை மாவட்ட பதில் அரசாங்க அதிபர் இங்கு சுட்டிக்காட்டினார்.

மீள்குடியேற்ற செயற்பாட்டினை நீண்ட காலங்களுக்கு இழுத்துச் செல்ல முடியாது. இந்த வருடம் அரசாங்கத்தால் வரவு செலவுத் திட்டத்தில் இதற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்படவுள்ளது. எனவே இந்த பொன்னான சந்தர்ப்பத்தை நீங்கள் அனைவரும் சரிவரப் பயன்படுத்த வேண்டும் என கேட்டுக்கொண்டார்.

குறித்த பிரதேசத்தில் செயற்படும் மிதிவெடி அகற்றும் நிறுவனங்கள் மீள்குடியேற்றத்துடன் தொடர்புடைய அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்கள், பாதுகாப்பு தரப்பினர் மற்றும் மீள்குடியேற்ற வேண்டிய குடும்பங்களின் பிரதிநிதிகளை உள்ளடக்கியதாக நடைபெற்றது.

இதன் போது, குறித்த பகுதிகளில் மீள்குடியேற்ற தேவைப்பாடுகள் மற்றும் தற்போதைய நிலைப்பாடுகள் தொடர்பில் பச்சிலைப்பள்ளி பிரதேசசெயலக பிரதித்திட்டமிடல் பணிப்பாளரால் விளக்கமளிக்கப்பட்டது.

தொடர்ந்து, துறை சார்ந்த திணைக்கள தலைவர்களால் குறித்த பகுதிகளில் தங்களது திணைக்களத்திற்குட்பட்ட விடயங்கள் தொடர்பில் தமது கருத்துகளை முன்வைத்தனர்.

மேலும் குறித்த பகுதிகளில் கண்ணிவெடியகற்றல் செயல்பாடுகள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டது. குறிப்பாக இந்த ஆண்டுடன் கண்ணிவெடிகளை அகற்றி குறித்த காணிகளை மக்களிடம் முழுமையாக கையளிப்பது தொடர்பில் அதிக கவனம் செலுத்தப்பட்டது.

குறிப்பாக வீதி, வீட்டுத்திட்டம், மலசலகூடம், கிணறு, மின்னைணப்பு, வாழ்வாதாரம், ஆலயங்கள் முதலிய பல்வேறு மீள் குடியேற்ற தேவைப்பாடுகள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டன.

முகமாலை கிராம அலுவலர் பிரிவின் பொது நோக்கு மண்டப வளாகத்தில் இரு பயன்தரு மரக்கன்றுகள் நாட்டி வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இக்கலந்துரையாடலில் மாவட்ட செயலக திட்டமிடல் பணிப்பாளர், பிரதேச அபிவிருத்தி குழு தலைவரின் இணைப்பாளர், பச்சிலைப்பள்ளி உதவிப் பிரதேச செயலாளர், பிரதி மாகாண





விவசாயப் பணிப்பாளர், மாவட்ட செயலக மற்றும் பிரதேச செயலக உதவித் திட்டமிடல் பணிப்பாளர்கள், மின்சார சபை பொறியியலாளர், பொலிஸ் இராணுவ அதிகாரிகள், கமநல அபிவிருத்தி திணைக்கள மற்றும் பிரதேசசபை உத்தியோகத்தர்கள், மிதிவெடி அகற்றும் நிறுவன அதிகாரிகள், அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள், துறை சார்ந்த திணைக்கள உத்தியோகத்தர்கள், கிராம மட்ட உத்தியோகத்தர்கள், கிராம மட்ட அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் பொதுமக்கள் என பல்வேறு தரப்பினரும் கலந்து கொண்டிருந்தனர். 113




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House (Pvt) Ltd.நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 31.01.2025இல் வெளியிடப்பெற்றது